
# இத்தனை நாளாய்...



இந்து

# இத்தனை நாளாய்...

## [கவிதைத் தொகுதி]

## இந்து

தேன்பாளையம் கலைக் கழகம்

2017

| | |
|---|---|
| தலைப்பு | :- இத்தனை நாளாய் |
| வகை | :- கவிதை |
| ஆசிரியர் | :- இந்து |
| பதிப்புரிமை : | :- சி. அருள்ரதன் |
| அட்டைப்படம் | :- "கலை கடாட்சன்" ச. மேகவண்ணன் |
| பக்கம் | :- 139 |
| வெளியீடு | :- தேன் பாளையம் கலைக்கழகம் |
| அச்சிட்டோர் | :- துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு. |
| விலை | :- ரூபா. 300 |
| முதற்பதிப்பு | :- 2017 மாசி |

| | |
|---|---|
| Tittle | - Eththanai Naalaai |
| Type | - Poem |
| Author | - Inthu |
| Copyright | - S. Arulrathan |
| Cover designed | - "Kalai kadadsan" S. Mehavannan |
| Page | - 139 |
| Published by | - Then Palayam Kalai Kalakam |
| Printed by | - Thurkka Press, Kokkuvil, Batticaloa. |
| Price | - 300/= |
| First edition | - 2017 February |

## மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் கலாநிதி மு.கோபாலரெத்தினம் அவர்களின் வாழ்த்துச் செய்தி

நீண்ட கலைப் பாரம்பரியமும் ஆற்றலும் கொண்ட தேத்தாத்தீவு கிராமத்திலே பிறந்து செட்டிபாளையம் என்னும் பேரூரில் இல்லற வாழ்வில் இணைந்து கலைத்துறைக்குப் பெருமை சேர்த்துவரும் எனது மாணவன் அவர்களது இந்த கவிதை நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

இலக்கிய துறையினிலே படைப்புகள் அதிகம் வெளிவர சாத்தியமான இந்தச் சூழ்நிலையிலே நூலாசிரியர் தனது ஆரம்பகால கவிதைகள் தொடக்கம் இன்றைய காலம் வரை பதிவுசெய்த கவிதைகளை ஒன்றாகத் திரட்டி நூலுருவாக்கி வெளியிட முன்வந்துள்ளமையானது அவரது எதிர்கால இலக்கியத் துறைசார் பயணத்திற்கான நல்லதோர் அடித்தளமாகவே காணப்படுகின்றது.

இவரது இந்த கவிதைத் தொகுப்பானது அவரது வாழ்வோடு இணைந்த காதல் தாய் தமிழ் கல்வி மனிதம் பெண்ணியம் இயற்கை இறைவன் என்கின்ற பல்வேறு விடயங்களோடு தொடர்புபட்டதான உணர்வுகளின் வெளிப்பாடுகளினை எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளதனை படைப்புகளினை உற்று நோக்குகின்ற போது நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

எமது மக்களின் கலைப்பண்பாட்டு பாரம்பரியங்களை பேணிப்பாதுகாக்க வேண்டிய மிக முக்கியமானதோர் காலகட்டமாகிய இவ்வேளையிலே இளம் கலைஞர்கள் இவ்வாறு முன்வந்து தங்களது படைப்புக்களினை வெளியீடு செய்வதனூடாக அவை ஒரு சமூகத்தின் ஆவணப்படுத்தலாகவும் நம்மை

நினைத்துப் பார்க்க தூண்டுகின்ற ஒரு விடயமாகவும் அமைந்து விடுகின்றது. எங்களது மண்வாசனையும், வழக்காறு செற்களது பிரதி பலிப்புக்களும் இவரது படைப்பின் சிறப்பம்சமாகும்

எனவே தனது கன்னி முயற்சியாக இக்கவிதை வெளியீட்டினை மேற்கொள்ளும் இவர் நாடகம், பாடலாக்கம், போன்ற துறைகளிலும் பல்வேறு மட்டங்களில் சாதனை படைத்தவராகவும் காணப்படுவதனால் எதிர் காலங்களில் அத்துறைகளிலும் தனது சாதனைகளை தடம்பதிக்கவும் வேண்டுமென மனதார வாழ்த்துவதுடன் முயற்சிகள் வெற்றி பெறவும் ஆசிகளையும் வழங்குகின்றேன்.

கலாநிதி மூ.கோபாலரெத்தினம்
பிரதேச செயலாளர்
மண்முனை தென் எருவில் பற்று
களுவாஞ்சிகுடி.

## மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் நூலுக்கான வாழ்த்துரை

மட் / மமே / மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் திரு.நடராசா யோகேந்திரன் (இந்து) அவர்களை இளமைக் காலம் முதல் நான் நன்கு அறிவேன்.

மட் / தேத்தாத்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக்கல்வியில் பயிற்சி பெற்று ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் பின்னர் இளங்கலைமாணி (BA) பட்டத்தினையும் பெற்றுள்ளார். தமிழ் மொழியில் சிறந்த ஈடுபாடு உள்ள இவர் தனது இளமைக் காலம் முதல் கவிதையில் உள்ள ஈடுபாட்டின் காரணமாக கன்னிப்படைப்பாகிய இக்கவிதை நூலை ஆக்கியுள்ளார். இந்நூல் தாயும், நானும் தமிழும், நானும் கல்வியும், நானும் காதலும் நானும், பெண்ணியமும் நானும், மனிதமும் நானும், இயற்கையும் நானும், இறைவனும் நானும் ஆகிய எட்டுத் தலைப்புகளை உள்ளடக்கியதாக உள்ளது. இக்கவிதை நூலில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் யாவும் சமூகத்துக்கு நல்ல படிப்பினைகளை கூறக் கூடியனவாகவும் இக்காலத்துக்கு ஏற்ற கருப்பொருள்களை உள்ளடக்கிய கவிதைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளன. மிகவும் எளிய நடையில் சிறுவர் முதல் பெரியோர் வரையில் வாசித்து விளங்கி அனுபவிக்கக் கூடிய வகையில் இந்நூல் ஆக்கப்பட்டு இருப்பது இதன் மற்றொரு சிறப்பம்சம் ஆகும்.

ஆசிரியரான திரு. ந. யோகேந்திரன் அவர்களின் கல்விப் பணியும், எழுத்துப் பணியும் மேலும் சிறப்புற அமைய வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.அத்துடன் இவர் இன்னும் பல கவிதை நூல்களை கவிதை உலகுக்கு படைத்து வழங்க வேண்டும் என மனமார வாழ்த்துகிறேன்.

திரு.சின்னத்தம்பி மனோகரன்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.

# வாழ்த்துச் செய்தி

திரு.ந.வ. யோகேந்திரன் (இந்து) அவர்களால் வெளியிடப்படும் "இத்தனை நாளாய் ..." எனும் கவிதைத் தொகுப்பு நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன். பட்டதாரி ஆசிரியரான இவர் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டமேல் கல்வி டிப்ளோமா பாட நெறிகளைப் பயின்று எமது வழிகாட்டல்களைப் பின்பற்றி வருவது மற்றுமொரு மகிழ்ச்சியான விடயமாகும்.

ஒருவரின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் சிறந்தவொரு குறிகாட்டியாக ஆக்கங்கள் கருதப்படுகின்றன. பலபேர் சிந்திக்கின்றார்கள் பேசுகின்றார்கள் உபதேசிக்கின்றார்கள் ஆனால் எல்லோராலும் எழுத முடிவதில்லை. ஆயினும் இவர் இளம் வயதில் எழுதாளர் குழாத்தில் பிரவேசிப்பதும் சிறப்பான மற்றொரு விடயமாகும்.

இவ்வாக்கத்தில் எழுத்தாளரின் கற்பனைகள் பன்முகங்கொண்டதாக இருப்பதனைக் காண முடிகின்றது. இயற்கை, இறைவன், கல்வி, காதல், மனிதம், பெண்ணியம், தாய்மை என்பன பற்றியெல்லாம் எழுத்தாளரின் சிந்தனைகள் விரிவுபெற்றுச் சிறப்பாகச் செல்கின்றன. ஒவ்வொரு கவிதைகளும் நெடுங்கவிதைகளாக இருப்பது கவிஞரின் விரிசிந்தனைக்கு ஆதாரமாகும்.

மக்களை சிந்திக்க வைக்கவும் வழிகாட்டவும் இக்கவிதைகள் அமையுமென நாம் எதிர்பார்க்கின்றோம். எழுத்தாளர் திரு.ந.வ.யோகேந்திரன் அவர்கள் தொடர்ந்தும் எழுதுவதற்கும் அதனூடாகச் சாதனை படைப்பதற்கும் எனது இதங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இவரின் நிறைவான சிறப்புக்காக நாம் பரம்பொருளை பிரார்த்தனை செய்கின்றோம்.



திரு. க. ஞானரெத்தினம்
விரிவுரையாளர்–கல்விப்பீடம்
திறந்த பல்கலைக் கழகம்.

## அணிந்துரை
## இத்தனை நாளாய் - சில மனப்பதிவுகள்

சமூகப்பார்வை, தனிமனித உணர்ச்சி ,ஆதிக்க எதிர்ப்பு ,தற்புதுமை, மரபு எதிர்ப்பு, எளிமை முதலியன இக்காலக் கவிதைக்குரிய முக்கிய பண்புகளாகும். இவையாவும் அகம் கலந்த அனுபவஞ்சார்ந்து வெளிப்பட வேண்டியது அவசியமானது. அத்தகைய அனுபவத்திளைப்பு வாசகனையும் தொற்றவேண்டும் என்பது மிக அவசியமானது.

முற்கூறியவற்றோடு கவிதைக்குரிய ஆக்கக்கூறுகளும் கவனத்திற்குரியன. சொல், சொற்றொடர், வாக்கியம் என்பதன் முக்கியதுவம் அவற்றுள் முதன்மையானது. ஓசை (வெளிப்படையாகவோ உள்ளார்ந்தோ அமையலாம்),கற்பனை, அணிகள்,படிமம்,குறியீடு,ஏற்புடைவடிவம் முதலியன அடுத்து முக்கியம் பெறுவன.

மேற்கூறிய பின்புலத்தில் இத்தொகுப்பினை வாசிக்கின்ற போது முதலில் புலப்படுவது ,தற்புதுமை. இங்கு இடம் பெறும் தற்புதுமைகளுள் தலையாயது கவிதை பொருள்களை பகுத்து, வகுத்து, தந்திருக்கும் முறைமை. தாயும் நானும், கல்வியும் நானும், காதலும் நானும், பெண்ணியமும் நானும்,மனிதனும் நானும், இயற்கையும் நானும், இறைவனும் நானும். என்றவாறமைகின்றன. அவை. இத்தியாதி பகுப்பு, வகுப்பு முறைமை இத் தொகுப்பிற்கு ஓரளவு சுய வரலாற்றுப் பண்பையும் வழங்கியுள்ளது!

"இன்னவைதான் கவிஎழுத ஏற்றபொருள் என்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்.சேலை.கடல்,
மின்னல் மழை,முகிலை தென்றலினை மறவுங்கள் மீத்திருக்கும்
இன்னல் உழைப்பு ஏழ்மை இவற்றை பாடுங்கள்."

என்றான் ஈழத்து நவீனகவிதை முன்னோடி மகாகவி. இத்தொகுப்பு அதை நோக்கி ஒரு சில அடிகளாவது வைத்துள்ளது என்ற விதத்தில் பாராட்டிற்குரியதாகின்றது. முற்கூறிய கவிதை ஆக்கக்கூறுகளுள் இக் கவிஞரை சுகர்ஷித்துள்ளது. ஓசைச்சிறப்பு! ஓசைக்காகவே மரபு வடிவக் கவிதையில் எதுகை மோனைகளை அநாயசமாகக் கையாளுகின்ற ஆற்றல் இக் கவிஞரிடம் அதிகமுள்ளது. ஏற்ற எடுத்துகாட்டுகளை வாசகர் இனங்கண்டு கொள்வார்களாக!

ஓசைச்சிறப்பிற்காக கவிஞர் சிலர் இயைபுத்தொடைகளைக் கையாள்வர். இக் கவிஞரிடம் அதனைக் கையாளுகின்ற ஆற்றலும் அதிகமுள்ளது.

எடுத்துக்காட்டு-01

இத்தாலி தேசத்தில் இருந்து
இங்கிருக்கும் இனியாள் உனக்கென்று
இத்தாலி செய்து வந்தேன் பசும்பொன்னில்
இனியாளே எப்பொழுதும் உன்னுருவே கண்ணில்
மத்தளமேளம் மங்களகானம் கொட்டும் வேளை
மங்கையுன் கழுத்தில் இதைக்கட்டுவேன் காளை
பத்தாழி தாண்டியும் பாய்ந்து வருவேனுறவே
பாரில் நமக்கேது தடை எழிலுருவே.

எடுத்துக்காட்டு-02

உன் நெஞ்சத்தில்
எனக்கொரு
இடங்கொடு
அல்லது-கொஞ்சம்
விடங்கொடு.

எடுத்துக்காட்டு–03

“இப் போதெல்லாம்
நானாக நான் இல்லடி
நம் காதல் சின்னத்துக்கு
போடு ஒரு புள்ளடி
அதற்கான அடையாளமாய்
"ஐ லவ் யூ"
சொல்லடி–நம்
காதல் பஸ் பயணிக்க
கண்ணே ஒரு "வெல்" அடி
நம் காதலைப்பாட நான்
கண்ணதாசன் இல்லடி
உன் விழிதான் உலகில்
என்னை வீழ்த்துகிற வில்லடி
உன் வார்த்தைதான் என்னை
வாழவைக்கும் சொல்லடி
ஐ லவ்யூ சொல்லடி”

பின்னயதற்கு எடுத்துக்காட்டாகவுள்ளது பின்வரும் பகுதிகள்

உதாரணம்

“பகாப்பதம்போல வாழ்ந்தோம் பகுபதமாய் மாறி
பகுதியாய் எனை விட்டு விகுதியாய் போய் விட்டாள்......”

சிலேடையைக் கையாள்வதிலும் இக் கவிஞர் தன் திறனை வெளிப்படுத்துகின்றார்.

எடுத்துக்காட்டு-

"இனியவளே! என்றேன்
இனியவனே! என்றாள்.
இதயத்தில் இடியேறல் விழுந்தது
காரணம் அவள் சொன்னது
தன் காதலனை."

"என்னவளே! என்றேன்
என்னவனே! என்றாள்.
நான் அவளை —அவள்
தன் காதலனை."

பாரதிதாசன் பரம்பரையில் வந்த பலர் உதாரணமாக சுரதா, தமிழ்மகன் முதலானோரது ஆற்றலும் இக் கவிஞரிடம் பெருமளவில் வெளிப்படுகின்றது. அதாவது சுரதா போன்று உவமைக்காக கவிதை எழுதுவது, தமிழ்மகன் போன்று ஓசைக்காக கவிதை எழுதுவது என்பனவற்றையே இவ் வேளை நான் கருதுகின்றேன்.

கவிதைக்காக உவமையும் கவிதைக்காக ஓசையும் இடம் பெற வேண்டுமே தவிர உவமைக்காக கவிதையும் ஓசைக்காக கவிதையும்(அவ்வாறே சிலேடைத் திறனுக்காகவும்) இடம் பெறுவதன் பொருத்தப்பாடு எத்தகையது என்பது கூறாமலே விளங்கக்கூடியது.

எளிமைப்பண்பும் பெருமளவு இத்தொகுப்புக் கவிதைகளிலுள்ளன. எனினும் எளிமையாக எழுதுவதென்பது ஆழமான ஆழ்ந்த அர்த்தத்துடன் அமையுமாறு எழுதுவதெனபது மிகக்கடினமானது.

"தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்பது எளிமையும் பொருள் ஆழமும் கொண்ட அடியாகும்.இதனை எழுத பாரதியார் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாரென்பது சிறந்த கவிஞனொருவனாலேயே புரிந்து கொள்ள இயலும். கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் கவிதை எளிமை பலராலும் பாராட்டப்படக்கூடியது. இக்கவிஞரிடம் அத்தகு ஆற்றல் நிரம்பியுள்ளது. எளிமை என்பதனை மலினப் பொருளாக்கியவரும், தேய்ந்த நாணயமாக்கியவரும் கவிமணி என்பதனை இளந்தலைமுறைக் கவிஞர் பலரும் உணர்ந்து எளிமையாக எழுதுவது அவசியமானது.

ஆக இன்றைய காலத்து நவீன கவிதை என்றாலென்ன அதனது காலத்தொட்டிய வளர்ச்சியான புதுக்கவிதை என்றாலென்ன அவை உலகபொதுவான வடிவங்களாகின்றன! அவை பெற்றுவரும் மாற்றங்களை மொழிபெயர்ப்புகளுடாகவேன்றாலும் அறிய வேண்டிய தேவையும், விமர்சனங்களை எதிர்நோக்கும் பக்குவமும், சுய விமர்சனபாங்கும் பொறுமையும் இன்றைய இளந்தலைமுறை கவிஞர்களுக்கு அவசியப்படுகின்றன.அனைத்தையும் விட அகஞ்சார் அனுபவம் வாசகனிடம் தொற்றுவதும், பற்றுவதும் அதிகம் வேண்டப்படுகின்றன. ஓசையிலும் அணிப் பிரயோகத்திலும் காதல் அதிகம் கொண்டுள்ள,சிறகு முளைத்துள்ள இக் கவிஞன் மெல்ல மெல்ல திசை திக்கெட்டும் நோக்கி பறக்க முயல வேண்டும். அதற்கான அடிப்படை ஆற்றல்கள் இக்கவிஞரிடம் இருக்கவே செய்கிறது.

வாழ்த்துக்களுடன்
பேராசிரியர் செ.யோகராசா

# என்னுரை



எழுத்து உலகத்துக்குள்
கழுத்தை நுளைக்கவேண்டும் என்று
பழுத்த ஆசையால் பாடவில்லை
கவிதை நான்
அழுத்தங்களுக்கு ஆழான காரணமே
இழுத்தது என்னை
எழுத வேண்டும் என்று

தூண்டல்களின் வேண்டல்கள்
தாண்டவமாடிய போது
பூண்ட உணர்வுகளே
மாண்ட என்னை
மறுபடி பிரசவிக்க
ஆண்டு ஒன்பதிலிருந்து
அடியேன் வடித்தவைகள்
மாண்டுபோகாத
மறுவடிவே இப்பனுவல்

வாசகர் சொல்வது
வசையோ கசையோ
அசையாத நம்பிக்கை
அதனை ஏற்பேன் நான்

இலக்கிய உலகம்
இந்தப் புத்தகத்தை
இகழுமோ புகழுமோ
இகழ்ந்தால் எனக்கு

புகழ்ந்தால் தழிழுக்கு
என்பதோடு

நன்றிகளையும் நவிலலாம் என்று எண்ணுகிறேன்

நூலுக்கு அணிந்துரையை
நிலவுக்கு ஒளி போல
சாலச்சிறந்த
சான்றாதாரம் ஆகும்-அதனை
சீலராம் பேராசிரியர் செ.யோகராசா சேர் அவர்கள்
ஆழமாய் நூலை
ஆராய்ந்து அளித்ததோடு
காலத்தின் கட்டாயங்களை
கருத்தில் கொண்டு-எதிர்
காலத்தில் கவிபுனைய
கடப்படுவீர் என வாழ்த்தி
வழிகாட்டியதை எந்தன்
வாழ்நாளில் மறவேன் என்றும்
நன்றிகளையும் கூறி
நான் பணிந்து நிற்கின்றேன்

புத்தக வெளியீடு
புனிதம் பெறுவதற்கு
தத்தமது ஆசிகளைத்
தந்த நின்ற பெரியோராம்
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
சீலம்மிகு சின்னத்தம்பி மனோகரன் சேர் அவர்கட்கும்
மண்முனைத் தென் எருவில் பற்று
மாண்புறு பிரதேச செயலாளர்- கலாநிதி

மு.கோபால ரெத்தினம் சேர் அவர்களுக்கும்
வீடு வரை தேடி வந்து நான்
பாடிய கவிதை நூலுக்கு
ஆசிச் செய்தியை அளித்து என்னை
அகம் மகிழச் செய்த ஆசான்
திறந்த பல்கலைக்கழகத்தின்
திறமையான விரிவுரையாளர்
திரு.க.ஞானரெத்தினம் சேர் அவர்களுக்கு
உருக்கமான நன்றிகள் உரித்தாகட்டும்

என்னை எனக்கு அறிவிக்கும் வண்ணம்
தன்னை என் வரிகள் தாபரித்ததாக கூறி
நூலாசிரியரைப்பற்றி வாசகர் விளக்கம் பெறசெய்த
ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின்
விரிவுரையாளர் பகீரதன் அவர்களுக்கு
அகம் மகிழ்ந்த அன்பும் நன்றியும்

பாலிய வயது முதல் பண்புடன் பழகி நல்ல
மூலிகை போல இருந்து இந்த
நூலினை வெளியீடு செய்ய
ஆக்கமும் ஊக்கமும்
அருகிருந்தும் உதவி செய்த
கிருஸ்ணபிள்ளை சுதானந்தன் அவர்கட்கும்
வீரக்குட்டி சண்முகநாதன் அவர்கட்கும்
சிறப்பாக
எனது கவிதைகள் நூலுரு பெறவேண்டும்
என்பதே தனது தளராத ஆசை என்று
செயற்படுத்திய எனது தம்பி அருள்ரதன் அவர்கட்கும்
இனிய நல்ல நன்றிகள்

அட்டைபடம் அதனை
அழகுடன் வரைந்து தந்த
செட்டிபாளையத்தின் சிற்பி
ஓவியர் திரு.சங்கரப்பிளை மேகவண்ணன் அவர்கட்கும்
இதய பூர்வமான இனிய நல்ல நன்றிகள்
ஆக்கபூர்வமான பல கருத்துக்களை வழங்கிய
ஓ கே குணநாதன் அவர்கட்கும் நன்றிகள்
வடிவமைத்து அச்சிட்டு வெளியீடு காணச் செய்த
துர்க்கா அச்சகத்தார்க்கு நன்றிகளும் பாராட்டும்

என்னுரை என்பதனால்
அணிந்துரைக்கு அடி பணிந்து
நூலுக்குள் நுழைவோமா ?
வாசகரே வருவீரா!

என்றும் அன்புடன்
இந்து

# சமர்ப்பணம்



இத்தனை நாளாய்....
வெளிவருவதற்கு
எத்தனை நாட்கள்
இத்தனை நாளாய்
எனக்காகப் பிறந்தனவோ
அத்தனை நாட்களுக்கும்
அத்தோடு பெற்றோருக்கும்
இந்நூல் சமர்ப்பணம்.

இந்து

# காப்பு

இத்தனைநாள் எழுதியதில் தொலைந்ததுபோய் இன்றுவரை
பத்திரமாய் வைத்திருந்த பலவரிகள்— புத்தகமாம்
காரணமாய்  அருள்ரதனாய் வந்தென்னை ஊக்குவித்த
பூரணத்துக் கேதான் புகழ்.

# உயிரின் வினா

எந்தன் கவிதைகள்
என்னைப் பார்த்து
ஏளனம் செய்கின்றன
சொந்தக்காலில்
நிற்கமுடியாத நீ
எங்களை எழுதி — ஒரு
மூலையில் வைத்துவிட்டு
வந்தவர் போனவர்க்கு - மட்டும்
வாசித்துக் காட்டிவிட்டு
பூட்டி வைக்கிறாயே
நாட்டுக்குள் எங்களை
நடக்க விட்டால் என்ன?

பெற்றால் மட்டும் போதுமா?
பேணிக்காத்தால் போதுமா?
நாட்டு மக்கள் ஊடாக - நாங்கள்
நடந்துவர வேண்டும்.
பெற்றவன் யார் ? என்று கேட்டால் - உன்
பெயர் சொல்ல வேண்டும்.
விட்டால்த்தானே எங்களை
வேறென்ன செய்வோம்? — என்று
அட்டகாசமாய்
அதட்டிக் கேட்கின்றன.

# தாயும் நானும்

## நால்வர்



பத்துமாதம் சுமந்து பெற்று
பண்புடையோனாய் கல்வி கற்று
உத்தமனாய் உன்னை உயர்த்திட
நித்திரை இழந்து நிம்மதி இழந்து
எத்தனை துன்பம் நீ செய்த போதும்
பத்திரமாக உன்னை பாதுகாத்தவள் அன்னை.

இத்தரை மீது அவளை
நித்தமும் தெய்வம் எனவே
மதித்துத் துதித்திடு தோழா
மதியாத நாளெல்லாம் நாளா?
துதித்தால் நீங்கிடும் மடமை
இதுவே உனது கடமை.

வியர்வையை உனக்காய் சொரிந்து-உன்
உயர்வையே தனக்காய் நினைந்து
அயராது எப்போதும் உழைக்கும்
அப்பாவைத் தொழும் பிள்ளை பிழைக்கும்.

வித்தகனாக உன்னை
விளங்க வைத்த குருவை
அடுத்தபடியாக மனதில்
அன்பாய் போற்றிட வேண்டும்.

மறைமுகமாக மனதில்
மர்மமாய் விளையாடும்
இறைவனை போற்றி வாழ
ஒரு துயரும் உனை அணுகாது.

# தாய்



பத்து மாதம் பகலிரவாய்
பாரில் தினமும் சுமந்து
எத்தனை துன்பம் ஏற்படினும்
எள்ளளவாக அதை மதித்து
வித்தகனாக நீ விளங்க
வேண்டினாள் பதியை துதித்து
உத்தமி அவளைச் சொத்தெனவே
உளமார அன்புசெய் மனதில் மதித்து

கட்டெறும்பு உன் காலில்
கடித்தாலே கூட வேலையை
விட்டெறிந்து கிட்ட வந்து
வீட்டு வைத்தியம் செய்வாள்
பட்டமரத் தூசிகூட கண்ணில்
பறந்ததை அறிந்தால் போதும்
சட்டென்று ஓடி வந்து ஊதி
சடுதியில் ஒத்தடம் கொடுப்பாள்
பட்டம் பதவி விட்டோடலாம் –தாய்
பாசம் என்றும் விட்டோடுமா?

பிள்ளை என் வாழ்வுக் கென்று
புண்ணியங்கள் புரிந்து நின்று
பள்ளையப் பேச்சிபோலும்
பகை விரட்டும் மாரி போலும்
வெள்ளை வனசத்தில் வீற்றிருந்து
வீணை இசைக்கின்ற வாணி போலும்
வள்ளல் மனம் வாய்த்த நல்ல
வடிவழகு அல்லவோ தாய்

# பாராட்டிப் பாடுவோம்



சரீரத்தைச் சாறாய்
பிழிந்து முன்னாளில்
உதிரத்தைப் பாலாய்
ஊட்டிய அன்னை
சோகமே தெரியாமல்
வளர்த்தாள் என்னை

தாகம் தீர்ப்பதில்
இளநீர் தரும் தென்னை.

அனைவரும் சொல்லும்
முதல் வார்த்தை அம்மா
அதை உணராமல் நீயும்
உழராதே சும்மா
உயிராக மதித்து
நடந்திடு கண்ணம்மா
உணராமல் நடப்பது
உனக்குத் தகுமா?

கண்ணை இமை காப்பது போல்
என்னை அவள் காத்தாள்
உதிராத மலராக அம்மா
என் மனதில் பூத்தாள்.

தாலாட்டிச் சீராட்டி
தன்னுடைய சுகம் மறந்து
சோறூட்டி நீராட்டி
சுகம் பெற வாழ வைத்தாள்.
பாராட்டிப் பாடுவோம்
பல்லாயிரம் கவிதை-தாயை
பாராட்டிப் பாடுவோம்
பல்லாயிரம் கவிதை.

# சித்திரை வருடமும்
# சீத்தை துணியும்



நேற்று நடந்தது போலதான்
நினைவில் இருக்கிறது
சித்திரை வருடமும்-அந்த
சீத்தைத் துணியும்
மாற்று உடுப்புக்கென்று
மட்டக்களப்புச் சென்று
ஏமாற்றுக் கடையொன்றில்
என்னம்மா வாங்கி வைத்த
போன வருசத்துப்
பூப்போட்ட சீத்தையது.

வறுமையின் நிறமும்
சிவப்பென்றோ என்னவோ
வாங்கிய சீத்தையின்
வண்ணமும் அதுதான்.
புதுவருடப் பிறப்பு
பொலிவுற வேணுமென்று
ஊரிலுள்ள எல்லோரும்
உடுப்பெடுத்து வருகிறார்கள்.
அம்மாவுக்கும் ஆசை தான்
அண்ணனுக்கும் எனக்கும்

சும்மாவாகிலும் ஒரு
"சூட்" எடுக்க வேணுமென்று
எம் மாத்திரம் கடன்
என்ன செய்வாள் அவள்.
எல்லோர் வாயிலும்
இருந்து வந்த வசனம்
"நாளைக்கு வருசம்
இன்றைய ஒரு பொழுது"
ஏழைக்கு வருசம்
எப்போதும் என்று
பாழாய்ப் போன இந்தப்
பாருக்குத் தெரியுமா?



இன்னும் உடுப்பு இல்லை
என்பதால் எனக்கும்
அண்ணனுக்கும் மனதில்
ஆழ்ந்த கவலை.

பெற்ற தாயின் மனம்
பெருமூச்சு விட்டது
சற்று நேரம் யோசித்து
சடுதியாய் எழுந்தாள்.



பாவாடைக்கென்று என்றோ
பல நாளுக்கு முன் வாங்கிய
பப்பிளின் துணியையும்
பழைய சீத்தை அதனையும்
கையில் எடுத்தவளாய்
கனிவாய் எம்மை அழைத்துக் கொண்டு
தையல் காரியிடம் சொல்லி
தைத்து கொடுத்த–அந்த
பப்பிளின் சாரமும்
சீத்தைச் சேட்டும்
இப்போது போலதான்
இருக்கிது எனக்கு.

அந்த வருடத்தின் கடைசி இரவு
வந்து சேர்ந்தது
வரவில்லை தூக்கம் – காரணம்
புதுச்சட்டை போடும் ஏக்கம்.

அரப்பு வைச்சி முழுகி
ஆலயம் சென்றோம்.
எல்லோரும் போகிறார்கள்
என்பதற்காய் நாங்கள்
அல்லலைப் போக்கச் சொல்லி
அழுவதற்காய் அம்மா

கோயிலுக்கு வந்தோர் எல்லாம்
கும்பிட்டாரோ இல்லையோ-நாங்கள்
அம்பிட்டோம் அவர்களது
அருவருப்புப் பார்வையில்.

எதிர்ப்பட்ட எல்லோரும்
சிரிப்பதைப் பார்தேன்.
நானும் சிரித்தேன்.
அம்மாவின் விழியில் மட்டும்
ஆறு பெருகியது.
ஏனென்று உணரும் நிலை
இல்லை எனக்கன்று
ஆனால் ஒரு சொட்டு
விழிநீரும் அவளுக்கன்று.

வீட்டுக்கு விரைந்தோம்
விளையாட ஆசை
சுவட்டாளிமாரைத் தேடி
குதித்துச் சென்றேன் ஓடி

அந்த வயதிலும் சில
அன்பான நண்பர்கள்
எந்தக்கடையில்
எடுத்தாய் என்றனர்.



இவனோடு விளையாட
இயலாது என்றனர்
"பப்பிளின் சாரன்" என்று
பட்டம் சூட்டினர்.

இப்போது எனக்கு
அம்மாவின் கண்ணீரின்
அர்த்தம் விளங்கியது.

நேற்று நடந்ததைப் போலதான்
நினைவில் இருக்கிறது.
சித்திரை வருடமும்–அந்தச்
சீத்தைத்துணியும்.

# என்னை ஈன்றவள்



அம்மா நீ
எம்மாத்திரம் கஷ்டங்களை
எனக்காக அடைந்தாய்

கருவாக உன் வயிற்றில்
உருவானதனால் தானே
பெருந்துயரங்கள் பட்டு-நீ
வருந்தி வாழ நேர்ந்தது.
இருபத்தைந்து வயதாகிறது
இருந்தும் நான்
ஒரு பத்து ஐந்து சதம் கூட
தருவதற்கு முடியவில்லை.

சும்மா இருந்தால்கூட
சுகமாய் இருந்திருப்பாய்
ஏனம்மா என்னை பெற்றாய்
பெற்றென்ன பெருமை கண்டாய்

மடிக்குள் வைத்து வளர்த்தாய்
படிக்க வைப்பதற்கு படாத பாடு பட்டாய்
அதனை உணர்ந்து கற்றிருந்தால்
ஆறுதலாவது பெற்றிருப்பாய்.

நான் கும்பிடுபோட்ட
தெய்வங்கள் கூட
துன்புறும் நேரங்களில்–சிலசமயம்
தாமதித்திருக்கின்றன.

ஆபத்து வேளைகளில்
அம்மா என்று அலறியதும்
அடியெனக்கு வலியுனக்காய்
ஓடி வருவாயே
உன்னை விடத் தெய்வமா?

தெய்வத்தை காணவென்று
தேட வேண்டிய தேவை
அம்மாவைப் பார்த்தவருக்கு
அவசியமில்லை.
மாதா உன் மடியில்
தலை சாய்ந்த போதுதான்
மண்ணுலக சொர்க்கத்தை
கண்ணெதிரே கண்டேன்.
பெருந்துயரங்கள் கூட
பெற்றவள் மடிசாய்ந்தால்
பெரிதாய் தெரிவதில்லை.

அம்மா
வெளியூர் சென்று-நான்
வெகுநாள் தங்க
விரும்புவதில்லை
ஏனென்று தெரியுமா?

வெளியூர் நான் சென்றால்
வெத்திலை போட்டுக் கொண்டு
நள்ளிரவு வரை நீ
கண் விழித்து இருப்பதுதானே
காட்சிக்கு வரும் எனக்கு
எப்படி தெரியும்
என்றா கேட்கிறாய்?
அன்னைை வேலைக்கு
அனுப்பிவிட்டு அன்றிரவு
கண்ணை நான் திறந்த போதெல்லாம்-நீ
காட்சி கொடுத்த வடிவம் அது
குப்பி விளக்கு கூட
மின்னிமின்னி அணைந்தது
உன்தன் விழியிரண்டும்
விடிய விடிய மின்னியதே மறப்பேனா



# தமிழும் நானும்

## தந்த பதவி



அடவிகள் தெருக்கள் சாக்கடைகள்
அசுத்தமான இடங்களெம் வதிவிடங்கள்
உடமைகள் இழந்த நிலையினுள்ளும்
உயிரோடு உள்ள உயிரினங்கள்
கடமையைச் செய்கின்றோம் எனச்சிலர்
கனவிலும் நிம்மதியை கழைந்து
சடமென வாழ்வை சங்காரம் செய்து
சனநாயகம் தந்த பதவி அதுவே அகதி

# ஏன் பிறந்தேன்
# ஏங்குகின்றேன்

அன்னையை வருத்தி
அவதரித்தேன் அன்று
பின்னர்தான் உணர்ந்தேன்
பிறந்தேன் ஏனென்று

சுழன்று வீசிக் கொண்டிருக்கும் சினம்மிகு
சூறாவளி இடையுண்டு பறக்கும்
தளர்ந்த பஞ்சினைப் போல்-தமிழினம்
தவிக்கின்றது தரணியில் தினம்



சோழமண்டலமோ! பூமியின்
சொர்க்கமோவென இருந்த இடம்
பாழடைந்து சாம்பல் மேடாய்
புரண்டதேனோ தடம்

பல்விழுந்தாலும் பறவாயில்லை முரசால் நெம்பி
புசித்துணவு பசிக்குணிணலாம்
செல்விழுந்தால் என்ன செய்யலாம் தம்பி
சிவசிவா என்று சீவனை வீடுவதை தவிர

பன்னிரெண்டு மணியிருக்கும்
படுத்திருந்த சிசுவொன்று
தன்னுடலுக்கு தகாத உணவாம்
தக்காளிப்பழத்தை உண்டு
துன்புறுகின்றது துவண்டு
சின்ன உடல் சுருண்டு
வாகனமுண்டு வைத்தியசாலையுண்டு
வசதிவாய்த்த வீதியுண்டு
போக முடியாத நிலை கொண்டு
போனதம்மா உயிர் மாண்டு
வாழவும் முடியுமா மனங்கொண்டு
வையத்தின் இந்நிலை கண்டும்

அன்னையை வருத்தி
அவதரித்தேன் முந்நாளில்
ஏன் பிறந்தேன் என்று
ஏங்குகிறேன் இந்நாளில்.

# வெறி



அக்கிரமக்காரர்களின்
ஆக்கிரமிப்பு கொடுமைகளை
தூக்கி எறிவதற்கு
துர்ப்பாக்கியம் அழிப்பதற்கு
சீக்கிரமாய் எழுந்து
சின வெறி
இதனால் ஏற்பட்டதே
இன வெறி.


தாலியை தொழுது எழும்
தமிழினத்து நங்கையர்களுக்கு எதிராய்
பாலியல் பலாத்காரம்
பண்ணப்படும் நிலை கண்டு
பழிக்கு பழி வாங்க
எண்ணியதும் எழுந்தது
பாச வெறி பின்
வளர்ச்சி அடைந்ததால்
அது தேசவெறி

கள்ளுச் சாராயம்
குடித்த போதும்
கஞ்சா புகையை
பிடித்த போதும்
பொங்கி எழுந்தது
போக வெறி
கொஞ்சம் கூடினால் அது
மோக வெறி.

சிற்றின்பமே
சிறந்தது என்று
கற்பிழந்து
கட்டுப்பாடிழந்து
அபச்சார நிகழ்வுகளுக்கு
காரணமாவது
காம வெறி
கட்டிளமைப் பருவத்தின் பொறி
கட்டுப்படுத்துவதே தக்க நெறி.

இன்பத்தை அழித்திடும்
இன வெறி
நாசத்தை கொடுத்திடும்
தேச வெறி
தேகத்தைக் கெடுத்திடும்
போக வெறி
தூய்மையை தொலைத்திடும்
காம வெறி இவற்றை
அடக்கி ஆழ்வதே
நேர் நெறி.

# நிம்மதியில் நிம்மதி



எத்தனை காலம்
யுத்த சூழலுக்குள்
நித்திரை இன்றி
நிம்மதி இன்றி
உயிருக்குக்கூட
உத்தரவு இன்றி
இத்தரைமீது
இருந்து வந்தோம் நாம்

சத்தியங்கள் சிதையுண்டு
சமாதானம் புதையுண்டு —எம்
மத்தியில் எத்தனை
மர்மக் கொலைகள்
பைத்தியம் போல் அல்லவா
பாரில் உலாவி வந்தோம்
வித்திட்டது எது இந்த
விசமங்கள் தலை தூக்க

அத்தரைப் பணிவோர் என்றும்
புத்தரைப் போற்றுவோர் என்றும்
அல்லாவை ஆதரிப்போர் என்றும்
இயேசுவை நேசிப்போர் என்றும்
பிரிவினை பேசியதால் வந்த
பெருவினை அல்லவா இது

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
என்ற உண்மையை
ஏன் மறந்தாய் மனிதா?

அன்னை வயிற்றில்
அவதரித்த போது
உன்மொழி எது வென்று
உனக்கு தெரியுமா?

உணர்வுகளை வெளிப்படுத்த
உருவாக்கிய மொழியைக்கொண்டு
சிங்களவர் தமிழர் என்று
சிறுமை பெருமை பேசி நின்று
வங்கத்து இலங்கையர் என்ற
வாதம் மறந்ததனால்
வந்தது அல்லவோ தான்
வெந்துயர் உந்தனுக்கு.

நீண்ட காலத்துக்கு பிறகு
நிம்மதியான சமாதானம் வந்து
காலடியில் கிடந்து
கையேந்தி நிற்கிறதே!

ஆதரித்து அனுசரித்து
அமைதிபெறப்போகிறாயா?
மிதித்துத் துரத்தியதை
மீண்டும் அழியப்போகிறாயா?
நின்மதியில்
நிம்மதி இருக்கிறது.

வன்முறையை மறந்து–நீ
வாழும் முறையை அறிந்து
முன்னேற்றப் பாதையிலே பறந்து
முழுமனதோடு வா விரைந்து
உரந்தரும் சமாதானத்தை நேசித்து
நிரந்தர சமாதானத்தை சுவாசிப்போம்.

சண்டை செய் என்று சொன்ன
சமயம் எங்கு உண்டு?
அன்பை பரிமாறாத
அரிய மொழி எங்குண்டு
இன்றில் இருந்தே
எழுந்திடு அறிவு கொண்டு
நிரந்தர சமாதானத்தை
நிலை நிறுத்துவோம் என்று

இந்தச் சமாதானம்
எத்தனை நாளோ என்ற
கேள்விக் குறியை மாற்றி
என்றும் இனிமேல்
சமாதானம் நிலைக்கும்–என்று
முற்றுப்புள்ளி வைக்க
முடிவெடு இன்றே.

உந்தனுக்கு என்ற இடத்தை
உறுதி செய் தவறு இல்லை
அடுத்தவரின் அபிலாஷைகளையும்
அனுசரித்தால் நிச்சயம்
நிரந்தர சமாதானம்
நின்னிடம் சரணடையும்.

சமாதானம் சரணடைந்தால்
சாந்தி சுபீட்சம் அமைதி யெல்லாம்
உமதாகும் ஆட்சேபனை
உனக்கினிமேல் வேண்டாமப்பா
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
கண்டுகொண்டோம் கண்ணெதிரே

# சந்திக்க முடியவில்லை




சமாதானமே!
சந்திக்க முடியாத -சில
மந்திரிகளைப்போல
நீயும் ஆகிவிட்டாய்

உயிர்க்கொலைகள் கூட
உயர்ந்தவையே என
மத குருக்கள் மாரும்
மனதார போதிக்கும்போது
நீ வருவது எங்கே
நிம்மதி தருவது எங்கே?

உன்னை எதிர் பார்த்த கண்கள்
மங்கிவிட்டது
எண்ணி எண்ணி மனம்
வெம்பிவிட்டது.

நிராயுத பாணியாய்
நிற்கும் பெண்களிடம்
போராயுதம் காட்டி கற்பை
சூறையாடுகின்ற
சூரத்தனம் தானா
சனநாயகம்.



சனநாயகம் என்ற பேரில்
சன அநியாயம் போரில்
செய்யும் நாட்டில்
சமாதானமே உன்னை
சந்திப்பது எப்போது?

பத்திரிகைச் செய்தியாக மட்டுமே–நீ
பிரசுரிக்கப் படுகிறாய்
உண்மையில் எப்போது
பிரசவிக்கப் படப்போகிறாய்?

உன் பெயரைச் சொல்லித்தானே
அத்தனை அரசாங்கங்களும்
ஆட்சிக்கு வருகின்றது.

பாலர் வகுப்பில்
படித்த ஞாபகம்
காலையில் அப்பா
வயலுக்குச் செல்வார்
மாலையில் மீண்டும்
வீடு திரும்புவார்.

ஆனால் இன்று
நாங்கள் செல்கிறோம்.
அப்பா சென்று கொஞ்சநேரத்தில்
அழுதபடி வயலுக்கு
இப்போதெல்லாம்
எங்கள் வயல்களில்
நெல் விளைவதைவிட
செல் விழுவதே அதிகம்.

பாலுக்கு அழுதபிள்ளை
கண்ணுறங்குகின்றது
தாயின் கண்ணீரை
உண்ட களைப்பில்.

வளிமண்டலம்
உஷ்ணம் அடைந்து
வருவதற்குக் காரணம்.
ஓசோன் படலத்தில்
ஓட்டை விழுந்தது - மட்டுமல்ல
விதவைகள் விடும்
வெப்பப் பெருமூச்சும்தான்.

புறாவைப் பறக்க
விடும் போது
உன்னையும் சேர்த்து
கட்டுகிறார்கள் போலும்
எனவேதான்
எங்கு தேடியும் உன்னை
சந்திக்கமுடியவில்லை.

வாழை மரங்கள் கட்டி
வருக வருக என்று
எழுதி ஒட்டி—உன்னை
வரவேற்கும் நிலையில்
நாங்கள் இல்லை
இருப்பினும் ஏங்கி
எதிர்பார்க்கின்றோம்
சமாதானமே!
சந்திக்க வருவாயா?

# பாலைவனம்

## சோலைவனமாக ......

முன்னேற முற்றிலும் தேவையானது முயற்சி
முற்றிலும் அதற்கு விரோதி அயர்ச்சி
எந்நேரமும் ஓயாமல் எடுத்திடு பயிற்சி
ஏராளம் உனக்கு ஏற்படும் உயர்ச்சி

பாலை வனமான உந்தன் வாழ்வை
சோலை வனமாக மாற்ற
சூழைக் குடித்தேனும் கற்று
குலத்தை உயர்த்திட வேண்டும்.

# கல்வியும் நானும்

## சுந்தர ஆசான்கள்



அதிர்கின்ற குரலால் அழகிய தமிழில்
எதிர் வந்த துன்பம் எமைவிட்டு ஓட
அறிவுரை கூறும் அதிபர் அவர்கட்கு
அடியேனின் அன்பான முதற்கண் வாழ்த்துக்கள்.

பள்ளிதனில் பாங்குடனே
பாடம் சொல்லித்தருகின்ற
ஆசிரியர் அனைவருக்கும்
அன்பான வாழ்த்துக்கள்.

உங்களது உழைப்பினை
உன்னிப்பாய் நோக்கிடவே
மங்களம் பொங்கக்
கவிபாடுது என்மனது.

செந்தமிழ் கணிதமும்
சிறப்பான ஆங்கிலமும்
விந்தையும் வியப்பும்
ஆன விஞ்ஞானமும்
சமூகக் கல்வியும்
சமயமும் எமக்கு
சுமூகமாய் போதித்த
சுந்தர ஆசான்கள்
அத்தனை பேரையும்
உத்தமமாக
நித்தமும் மனதில்
நினைத்துப் போற்றுவோம்.

தான் உருகி ஒளிகொடுக்கும்
மெழுகுவர்த்தியைப் போன்று
நிம்மதியை நீரிழந்து
நிதம் எம்மைக்கற்பித்தீர்.

கல்வி என்னும் விளக்கேற்ற
காலமெல்லாம் தீக்குச்சாய்
தான் அழிந்து தான்மகிழும்
தன்மை தனைக் கொண்டதனால்
தேன் பிழிந்து தினைகலந்த
அமுதத்தை ஒத்திடுவீர்.

பரீட்சை என்னும் பெரும் வெயிலில்
பரிதவித்திடாமல் நாங்கள்
விருட்சமென நிழல் கொடுக்கும்
அருட்செல்வங்கள் நீங்கள்.

மாணவர்கள் நாங்கள் உங்கள்
மனம் நோக நடந்திருந்தால்
மன்னிக்க வேண்டும் என்று
மன்றாடி கேட்கின்றோம்.

# நான் கற்ற கல்லூரி



மணியடிச்சா சோறு என்பது-எல்லா
மாமியார் விட்டிலும் அரிது
கல்லூரித்தாயே அதுவுன்
காலடியில் தானம்மா.

வேளைக்கு எழுந்து
வேலைகள் முடிக்கும்
வழக்கத்தை எனக்கு
பழக்கியவள் நீதான்.

இருபது வயதின்
எழுச்சியை அடக்கி
முதுபெரும் முனிவனாய்-தவம்
முயன்றிடச் செய்தாய்
மாசது நீக்கி

மடமையைப் போக்கி
தேசத்தின் விளக்காய்
திகழும் தொழிலை
பாசத்தில் மிகுந்த
பண்பாளரைக் கொண்டு
தேசுடன் போதித்த
தீர்க்கதரிசியும் நீயே
இரண்டு வருடம் உள்ளகப் பயிற்சி

இனிதே முடித்தபின் கட்டுறு பயில் வெனும்
என் கடைசிக் கல்லூரி ஆண்டிலேயே
உன் தசாப்தத்தை கொண்டாடும்
தருணம் வந்தது
பாக்கியம் என்றே
படுகிறது எனக்கு.
பல்வேறு பிரதேச
பயிலுனர் ஒன்றாய்
அன்புடன் அணுகி
பண்புடன் பழகி
நட்பெனும் நதியாய்
நடந்திட செய்தாய்.

எத்தனை பூக்கள்
எங்கள் சோலையில்
முன்பு அன்பு பூத்தது
பின்பு காதல் பூத்தது
நெஞ்சில் நினைவு பூத்தது
நினைவில் நிஜமும் பூத்தது
கனிவு பூத்தது
கருணை பூத்தது
ஏக்கம் பூத்தது
எழுச்சி பூத்தது
இப்படிப் பூக்கள்
எத்தனை வகைதான்.

அம்மா உந்தன்
அரிய வளர்ப்பில்
என்மேல் எத்தனை
இனிய மாற்றங்கள்.

குஞ்சுகளைப் பேடு
கூட்டி வளர்ப்பது போல்
தாய்மடியை சுற்றி
தவழ்ந்து வந்த என்னை
தத்தெடுத்து மூன்றாண்டு
தரணிக்கு முகம் கொடுக்க
அத்திவாரம் இட்ட எந்தன்
அன்னை உன்னை மறப்பேனா

உன்னுள்ளே இருந்த போது
ஓரேயொரு குறை எனக்கு
வெளியே வருவதென்றால்
வெந்நீர் குடிப்பது போல்

கட்டுறு பயில்வுக்காய்
காலடி எடுத்து வைத்தேன்
பட்டபாடு ஓரிருநாள்
பகரவியலாதவைகள்
இரவில் சாப்பாடு
இல்லாமல் தூங்கிய
முதல் நாள் அனுபவம்
மறக்கத்தான் முடியுமா?

அப்போது கூட என்
அன்னை சுட்டுத்தந்த
ஓரிரண்டு முறுக்கும்
உருண்டை பலகாரமும்தான்
பசிபிடிக்கா விட்டாலும்
பட்டினியை போக்கியது.

உணர்ந்து கொண்டேன் இப்போது
இவையெல்லாம் நீ எனக்கு
அனுபவத்தினூடாக
வாழக்கற்றுத்தந்தாய் என்று

ஆசிரியர் வரக்கூடாது —என்று
அம்மனுக்கு நேர்த்தி வைத்த-என்
ஆறாம் ஆண்டு நினைவு-இன்னும்
அடிமனதில் இருக்கிறது

ஏன் இன்னும் வரவில்லை
இனிய ஆசான் என்று-பிள்ளை
எதிர்பார்த்து ஏங்கி நிற்கும்
எவனோ அவனே ஆசான்.

என்று சொல்லித் தந்து
என்னையும் நல் ஆசானாய்
சென்று சேவை செய்து
சிறக்க வழி தந்தாய்

கல்வி முறைமையும்
கற்பித்தல் பயிற்சியும்
பிள்ளை உளவியல்
பெருமையுறு சமூகவியல்
கல்வியின் தத்துவம்,சமயம்
கலாசாரம் கவின் கலையும்
ஆலோசனை வழிகாட்டல்
அனைத்துமே போதித்து
ஆசிரிய சேவையாற்ற
ஆசிர்வாதம் தந்தவளே

ஆரம்பக்கல்வி
அதனோடு விவசாயம்
இந்து சமயம்
இணைந்து கிறிஸ்தவம்
மனைப்பொருளியல்
மற்றும் உடற்கல்வி
என்னும் அறுதுறையில்
ஏற்றமுறு பயிற்சி தந்தாய்.

எண்திசையிலும் இருந்து
இன்பமுடனே விரைந்து
வந்த நால் மதத்தவரும்
வரிசை ஒன்று பட்டு நின்று
சொந்தம் ஒரு குலம் என்று
சோதரராய் அன்பு கொண்டு
சேர்ந்து வாழ கற்றலுக்கு
சேத்திரமாய் அமைந்தவளே.

உன்
பத்தாவது அகவையை
பாடுவதற்கு நான்–வைர
முத்தாக பிறக்கவில்லையே

இருப்பினும் கல்லூரியே
எட்டுத்திக்கும் புகழ் பரப்பி
உலகம் உள்ள நாள் வரைக்கும்
உந்தன் புகழ் வளர்கவென
கட்டுறு பயிலுனர்கள் சார்பாய்
கருத்துடன் வாழ்த்துகிறேன்.
கல்லூரி மாதா வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!

# ஆசிரிய தீபங்களுக்கு ஆராதனை

மதுரக்குரலால்
மகிழ்வுறு தமிழில்
எதிர்வந்த துன்பம்
எமைவிட்டு ஓட
அறிவுரை கூறும் பதி
பீடாதிபதி அவர்கட்கு
கோடான கோடி வணக்கங்கள்.

அவனியிலே நாங்கள்
ஆசிரியர் செல்வங்களாய்
பவனி வருவதற்காய்
படாத பாடு படும்
உப பீடாதி பதிகளுக்கும்
உரிய நல்ல வணக்கங்கள்.

அரிவரி தொடக்கம்
உயர்தர வகுப்பு வரை
சரிவரக்கற்பிக்கும்
சகலவித நுட்பங்களையும்
உரிய உரிய நேரத்தில்
உத்தமமாய் போதிக்கும்
விரிவுரையாளர்கட்கும்
வினயமான வணக்கங்கள்.

கல்வி என்னும் உளி கொண்டு
கல்லென இருக்கும் மாணவரை
கலைவடிவாய் செதுக்கும் சிற்பிகளாய் –நாளை
திகழப்போகும் மாணவ ஆசிரியர்கட்கும்
தேனினும் இனிய
செந்தமிழ் வணக்கங்கள்.

தமிழ் எடுத்து வில் அமைத்து
கவி எடுத்து சொல் சரம் தொடுத்து
எதை எய்து வெல்ல வந்தேன்
நல்லாசிரியர் புகழ் சொல்ல வந்தேன்.

கைபிடித்து மணலில்
ஆனா எழுதப்பழக்கி
கல்லூரிவரை நீண்ட
கடவுளுக்கு முந்திய
படிநிலைகள் நீங்கள்

அம்மா அப்பாவுக்கு
அடுத்தபடி நீங்களென
சும்மாவா சொன்னார்கள்
எம்முடைய மூத்தோர்கள்.


பதனீர் பெறுவதற்கு பாளையை
தட்டித்தானே ஆக வேண்டும்
பயிற்சியில் நாங்கள் உயர்ச்சி பெற–எம்மை
திட்டித்தானே தீர வேண்டும்.

பாலுக்கும் பருப்பிற்கும்
வந்த சுவட்டம் -என்று
பகிடிக்கு நீங்கள்
பேசுவது சுவட
தேனுக்கும் மிஞ்சியது எமக்கு.

கல்வி உளவியல் தத்துவ அடிப்படை
அளவீடு மதிப்பீடு அழகியல் உட்பட
சுற்றாடல் சார்ந்த செயற்பாடதோடு
கற்பித்தல் பயிற்சியும் கல்வியின்
முறைமையும்
ஆசிரிய வாண்மையொடு விவசாய
விஞ்ஞானம்
மனைப்பொருளியலொடு மாண்புறு
உடற்கல்வி
கிறிஸ்தவ நெறியோடு சிங்கள
பாஷையும்
கணினிக் கல்வியொடு
கவின் பெறு தொழிநுட்பம்
அறிவு திறன் மனப்பாங்கு
அடிப்படையில் போதித்து
நடத்தை மாற்றத்துக்காய்
நாளெல்லாம் பாடுபட்டு
அறிவித்து எங்களை
வளர்த்திடும் உங்களை

ஆராதிக்கும் இந்நாள்
அவனியில் உண்மையில்
ஆனந்தப் பொன்னாள்
என்று கூறி
நன்றி சொல்லி
சென்று அமர்கிறேன்
நன்றி! வணக்கம்!!

# அழகருக்கு எனது
# அன்புச் சரம்



வங்கக்கடல் அலைபாய
தங்க ஒளி வீசிவரும்
செங்கதிரோன் வரவுகாணும்
கிழக்கிலங்கையில்
நெளிந்தாடும் வாவிமகள்
நீண்டிலங்க
மீன் பாடும் தேனாடாம் மட்டு நகரின்
வீரமுனை வாழ்ந்த செம்மல்
செல்லையா தவத்தில்
விளைந்த நல்ல முத்தல்லவோ
அழகரெத்தினம்.

பாலர் வகுப்பு முதல்
பல்கலைக்கழகம் வரை
சீலராகவே நீங்கள்
சிறந்து விளங்கினீர்கள்.

கல்வி கேள்வி முதல்
கலைகள் விளையாட்டு வரை
பல்வேறு துறைகளிலும் – கால்
பதித்து வாழ்ந்து வந்தீர்கள்.

மாமாங்கர் வீற்றிருக்கும்
மட்டுமா நகரினுக்கும்
கோணேசர் கொலுவிருக்கும்
திருகோண மலைதனுக்கும்
கந்தசாமி விளையாடும்
யாழ்ப்பாண மாநகர்க்கும்
வற்றாப்பளையாள் வசிக்கும்
வன்னிப் பெருநிலப் பரப்புக்கும்
மன்னார் அம்பாறை போன்ற
மற்றும் பல பகுதிகட்கும்
உற்ற நல்ல சேவையாளன்
உயர்வாளன் எம் பீடாதிபதி.

ஆளுமை என்பதனை
உளவியலில்தான் கற்றிருக்கிறோம்
ஆள் உருவமாக—அதை
உங்களில்தான் கண்டிருக்கிறோம்.

தூரநோக்கும் துடிப்பான சிந்தனையும்
தளராத மனமும் தாராள குணமும்
சவால்களைச் சந்திக்கும் சாமர்த்தியமும்
ஒருங்கே அமையப் பெற்ற
உயர்வான பதி எமது பீடாதிபதி.

திருமதி அழகரெத்தினத்தை
திருமண பந்தம் செய்து
இருபுதல்வி ஒருபுதல்வன்
ஈன்று உயர் வாழ்வுகாட்டி
அருமைநிறை இல்லறம் காத்த
அழகரல்லோ எங்கள் பீடாதிபதி.

ஆசிரிய தீபமென அன்பான அதிபரென
பேசரிய கல்விப் பணிப்பாளரென
தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியென
தேசம் புகழ் பதவிபல தரித்தவர் நீங்கள்.

பதினேழு கல்வியியற் கல்லூரிகளிலும்
பதவியில் இருக்கும் பீடாதிபதிகளுள்
முதல்வனும் மூத்தவனுமாய் விளங்கும்
முந்துபுகழ் அழகரல்லோ எங்கள் பீடாதிபதி.

கல்லூரி ஆரம்பித்த காலம் முதலாக
பத்து வருடங்கள் முத்தான சேவை
உத்தமமாய் ஆற்றி உயர்வு பல கண்டு- எம்
வித்தியாசாலை கல்வியியற் கல்லூரி
சித்தம் மகிழும் பல சிறப்புறு நிலைபெற
அத்திவாரமாய் அமைந்த அழகரெத்தினம்
வித்தியாசிரோமணி வாழ்க! வாழ்கவே!!!

# காதலும் நானும்

## காதல் தூது

கானகத்துக் குருவிகளே கண்சிமிட்டும் நாரைகளே
வானகத்துப் பறவைகளே வாருங்கள் –எந்தன்
கோலமயில் தனை அழைத்து வாருங்கள்–நான்
கோலமாய் போனதையும் கூறுங்கள்.

# உன்னால் என்னுள்



"ஈமோக்குளோபினாக"
இருந்து கொண்டு என்
இரத்தத்தின் நிறத்தை
ஏளனம் செய்கிறாய்
இது தகுமா?

தேவதையே
தேன்வதையே
என்றெல்லாம் உன்னை
நான் வருணிக்கமாட்டேன்.
காரணம்
தேவேந்திரனாகவோ அல்லது
எறும்பாகவோ நான் இல்லையே.

சீதனம் எதற்கு
ஆயுள் முழுவதும் -நான்
அனுபவிக்கும்
ஆதனம் நீ இருக்க.

சீர்வரிசையை
எதிர்பார்பேனா கண்ணே! உன்
பல்வரிசையை
பார்த்த பிறகு

அழகே நீ அணிந்துள்ள
பொன்னகைகள்
பொலிவிழந்து தெரிவதற்கு
பொருள் என்ன ?
ஓ....நீ
புன்னகை சிந்துகிறாய்.

# மெல் விரல்



இதுவரை என்னை
இதமாக எதுவும்
தீண்டவே இல்லை
வீசுகின்ற காற்றையும்–அவள்
விரல்களையும் தவிர

# கசந்து போன காதல்



நான்
பூங்கொடி என்று
நினைத்தேன் - அவளோ
தான் கொடியவள் என்று
காட்டிவிட்டாள்.

என் கவி என்று
எண்ணினேன் - அவளோ
புன் கவி என்று
புலப்படுத்திவிட்டாள்.

இனியவளே! என்றேன்
இனியவனே! என்றாள்.
இதயத்தில் இடியேறல் விழுந்தது
காரணம் அவள் சொன்னது
தன் காதலனை.

என்னவளே! என்றேன்
என்னவனே! என்றாள்.
நான் அவளை -அவள்
தன் காதலனை.

# உணர்ந்து
# கொள்

என்னவளே நீ
என்னை விட்டு
முற்றாக வெளியேற
முடியாது கண்ணே
காலம் வந்ததும்
கழிந்து போகும்
வியர்வை அல்ல நீ
உடலில் ஓடும்
உதிரமடி—என்னைவிட்டு
முற்றாக உன்னால்
உதிர முடியாது என்பதை
உணர்ந்துகொள்.

# காதலின் தண்டனை

பகாப்பதம் போல் வாழ்ந்தோம் பகுபதமாய் மாறி
பகுதியாய் என்னை விட்டு விகுதியாய் போய் விட்டாள்
இகப்பயன் எனவும் தவப்பயனாகவும் கருதியவள் மீது
இதயத்தில் அன்பு வைத்த இவனொரு முட்டாள்
மகா மழை போல மகிழ்ந்து பேசி உறவாடியவள்
மௌனமாகி என் மனதினைச் சுட்டாள்
தகாப்பிழை செய்தோரை தண்டித்தல் போலே
தன்மை இன்றி அன்பைத் துண்டித்து விட்டாள்.

# சிவப்பு ரோஜா

கன்னியர்கள் மனதில்
பெருமிதக் களிப்பு
உன்னைச் சூடிப்போகும் போது
காளை என்மனதில் ஒருவித வலிப்பு
நீ வாடிப்போகும் போது.

வாசித்தால்தான் சுவை கொடுக்கும்
வாரமலர்
சுவாசித்தாலே சுகங்கொடுக்கும் -நீ
ரோஜாமலர்.



ரோஜாப் பூவே !
தென்றல் கூட என்
முன்றலை தேடிவருவது
எனக்காக அல்ல
உனக்காகத்தான்


நீ சிவப்பாக இருப்பது
உன்னை பறிக்க நினைத்தால்
முள் குத்தும் என்பதை
முன் கூட்டியே
அபாயம் என்று சொல்லும்
உபாயத்துக்காகவா?

நீ தேன் கொடுப்பாய் வண்டுகளுக்கு
நான் கொடுப்பேன் உன்னை பெண்டுகளுக்கு
உன்னை கூந்தலில் சூடும் போது
என்னையும் தங்கள் இதயத்தில் சூடுகிறார்கள்.
கொஞ்ச நேரத்தில்-நீ
வாடி விடுகிறாய்
உன்னை வெயிலில் போடுகிறார்கள்
என்னை வெளியில் போடுகிறார்கள்.

பழைய ரோஜா உன்னை கழித்து விட்டு
புதிய ரோஜாவை அளிக்கக் கூடிய
இளையராஜாக்களை
தேடுவார்கள்
நாடுவார்கள்
கூடுவார்கள்.

பெண்கள் தங்கள்
காதல் விளையாட்டு
இதுதான் என்று காட்டும்
குறியீடுதான் நீ ரோ!

# நிலவே
# நீயுமா



இந்தச் சூரியனை
தாமரைகள் தூங்குறைத்துப் பேசலாம்
நிலவே நீயுமா?

நீ குளிராக ஒளிர வேண்டும்
என்பதற்காகவே-நான்
உஷ்ணமாக உருகிக் கொண்டிருக்கிறேன்.

என் கதிர்வீச்சுக்களால் தானே-நீ
கண்ணுக்கழகாய் இருக்கின்றாய்.

நான் இல்லையென்றால்
நீயும் இல்லை -என்
உரசல்கள்
உன் மீது இல்லையென்றால் -இந்த
உலகம் உன்னையும்
உணர்ந்திருக்க மாட்டாது.

# வருவேன்


# உறவே

இத்தாலி தேசத்தில் இருந்து எந்தன்
இங்கிருக்கும் இனியாள் உனக்கென்று
இத்தாலி செய்து வந்தேன் பசும்பொன்னில்
இனியாளே எப்பொழுதும் உன்னுருவே கண்ணில்
மத்தளமேளம் மங்களகானம் கொட்டும் வேளை
மங்கையுன் கழுத்தில் இதைக்கட்டுவேன் காளை
பத்தாழி தாண்டியும் பாய்ந்து வருவேனுறவே
பாரில் நமக்கேது தடை எழிலுருவே.

# தாராளமுண்டு

தெள்ளுதமிழ் கள்ளையுண்டு
தேனையுண்டு பாலையுண்டு
வள்ளுவன் வளர்த்த வண்டு
வந்தேன் உன்னைக்கண்டு
கிள்ளுவன் என்று மலர்ச்செண்டு
கிளம்பாதே கற்கண்டு
விள்ளுவன் ஒன்று நீயென் பெண்டு
விலகாது வீணை செய்யடி தொண்டு
தள்ளுவதேன் இழந்தளிர்த் துண்டு
தாவியனைத்திடு இன்பம் தாராளமுண்டு.

# காதல் சுமை



நீ பெண்மை சுமந்து கொண்டு
நான் உன் நினைவுகளைச் சுமந்து கொண்டு
உடல் சுமையாக இருந்தால்
இறக்கியாவது வைத்திருப்பேன்
இது உளச்சுமை
இறக்கிவைக்க முயலும் போது தான்
இன்னும் இன்னும் ஏறுகிறது.

# ஒத்துழைப்பு

செந்தேன் உன்பால்
சேலைகட்டிய சோலையே
வந்தேன் அன்பால்
வாழையிலைத் தோரணமே
சிந்தேன் முப்பால்
சித்திரமே என்றேன்
பூந்தேன் அப்பால்
போனதேன் இளங்கன்றே
வெந்தேன் நெருப்பால்
வாராயோ வடிவழகே அணைக்க

செப்பிய தப்பால்
சென்றாளவள் அப்பால்
கப்பிய களிப்பால்
கண்மூடி விழிப்பாள்
சிப்பி போல் சிரிப்பால்
சிறைபிடித்தாள் வாழ்வு பாழ்
தப்பிடத் தவிப்பால்
தவிக்கிறேன் வழியெப்போ?

அழகினில் அவளொரு அத்திப்பூ
அறு சுவைகளிலே தித்திப்பு
குளத்தில் வளர்ந்த கத்தரிப்பூ
கொஞ்சக்காலமாய் எனக்குத்தரிப்பு
உள்ளத்தில் பழந்த சித்தரிப்பு
உணர்ந்தும் செய்கிறேன் கத்தரிப்பு
வெள்ளத்தில் வளர்ந்த வத்தவப்பூ
வெறுத்து மறந்திடச் செய் ஒத்துழைப்பு.

# வயலில் வந்த அன்னம்



நீர் ததும்பும் களத்து நிலத்தில்
நளினம் அவளின் எழில் நினைத்து
ஏர் தொடுத்து உழுத பொழுது
எதிரில் வந்தாள் அந்த நிலவு.
கூர்தீட்டிய ஈட்டி போல் விழியால்
குத்தவீசி குனிந்தாள் கனி மொழியாள்
மார்பில் பட்டது அவளுடைய வீச்சு
மயங்கிப் போனேன் சோர்ந்தது மூச்சு.

கார்முகில்கள் கூடித்திரண்டு
கலைந்தது போல் கூந்தல் காட்டி
மோர்வருண முகத்தோடு முன்னழகால்
மோகமதை மனதில் மூட்டி
நேர்விழிக்கும் கொவ்வைப் பழமொத்த
நல்லிதழ் மீதும் சாயம் தீட்டி
சீரெழில் அழகால் என்னை வாட்டி
சிங்கார நகைகளெல்லாம் பூட்டி
பார் போற்றும் உயரிடமாம் வயல் காட்டில்
பருவமகள் வந்து நின்றாள் வரம்பு மேட்டில்.

அத்தான் என்றாள் ஆசையோடு
அடுத்த கணமே செத்தேன்
முத்தாரமே! மோகரசமே! மத்தாளமே!
முந்திரியம்பழமே! மோதகமே!
பித்தானேன் உன் மேல் என்றேன்
பிறை நுதலாள் அவளருகில் சென்றேன்
சத்தான தித்திக்கும் தேனூறும் இதழால்
சத்தமெழ முத்தமொன்று இட்டாள்
சித்தம் சிலிர்க்கதடி என்னும் முன்னம்
சென்று விட்டாள் தென்றலாய் அவ்வன்னம்.

சிட்டுக் குருவி ஒன்று கூடுதிரும்ப
சிறகடித்து வந்து என்னில்
முட்டி முகத்தில் மோதிய போதுதான்
முழுசாய் சுயநினைவுக்கு வந்தேன்
சுட்டெரிக்கும் சூரியன் வட்டத்தில் பாதி
சூடு தணிந்து மறைந்திருந்தான்.
வீட்டுக்கு விரைந்து வந்துவிட்டேன்-அவள்
விம்பமே விழியில் நிழலாடுகிறது.

# குற்றம்



என்னைப் பொறுத்தவரை
பெண்ணைப்படைத்து
கண்ணைப் படைத்தது
கடவுள் செய்த
குற்றம் அல்ல
ஆனால்
மின்னலிடையாளாய்
உன்னைப் படைத்ததே குற்றம்.

பூவைப் படைத்து
நாடிவரும்
வண்டைப் படைத்தது
குற்றமல்ல
கொடுமை செய்யவரும்
கொண்டலைப் படைத்ததே
குற்றம்.

மாதையும் சூதையும்
மதுவையும் படைத்தது
குற்றமல்ல–அதில்
போதை கொண்டு
பாதை மாறுகின்ற
பேதமை படைத்ததே
பெருங்குற்றம்.

சோலையை பாலையை
காலையை மாலையை
கடலை அதிலெழும்
அலையை கலையை
படைத்தது கூட குற்றமில்லை
காளையை கன்னியின்
கன்னியை காளையின்
வலையில் வீழ்த்தும்
வாலையை படைத்ததும்
குற்றமல்ல
என்னை உனக்கு
ஏற்றவனாய் படைக்காமல்
ஏமாற்றி விட்டானே
அது குற்றம்.

# இதயம் இழப்பாயானால்



தென்றலே என்னை
தீண்டச் சொல்லி உன்னிடம்
வேண்டிக் கொள்ளவில்லை-என்னை
தாண்டிச் செல்ல வேண்டாம் என்றுதான்
தயவாகக் கேட்கின்றேன்.

என் அன்பின் ஆழத்தை
அளக்க முடியாமல் இருக்கலாம்.
வேதனையின் விளிம்பையுமா?
விளங்கிக் கொள்ள முடியவில்லை.

பெண்ணே! - உன்
இதயக் கதவுகளைத் திறக்கும்
சாவியைக் கொடு-அல்லது
நான் வாழ்வதற்கு —என்
ஆவியைக் கொடு.

உன் நெஞ்சத்தில்
எனக்கொரு
இடங்கொடு
அல்லது–கொஞ்சம்
விடங்கொடு
இரண்டையும் நான்
ஏற்றுக் கொள்ளத் தயார்.

உனக்காக நான்
எதையும் இழக்கத் தயார்
எனக்காக நீ
இதயம் இழப்பாயானால்.

உன்னை நிலவு என்றால்
அதற்குக் காரணம்
நீ என் இதயவானத்தில்
உலவுவதுதான்.

நீ சந்திரனில் பிறந்திருந்தால்
"ஆம்ஸ்ரோங்" இற்குப் பதிலாக
அடியேன்தான்
அடிவைத்திருப்பேன்.

# என்னவளுக்கு



உன் முகம் பார்க்க ஓடி வந்த போது
நீ முக்காடு போட்டுக் கொண்டாய்
என்னை தவிக்க வைப்பது தான்
உன் தாகம் என்றால் போடு
முக்காடு போடு போட்டுக்கொண்டே இரு.

என் ஆசைகள் எல்லாம்
உன்னிடம் வந்த பிறகு
இந்த மீசை மட்டும் எதற்கு
என்பதனால் தான் இப்போது
மீசை கூட வைப்பதில்லை
புரிகிறதா?

எவ்வளவோ பேச ஒத்திகை பார்த்து
எதிரே வரும் போது
சுவாசமே நின்று விடுகிறது.
என்ன இன்று எதையுமே பேசவில்லை
என்று நீ நினைக்கலாம்
நான் பேச நினைத்தவைகள்
உன்னைக் கண்டதும்
எங்கே போனதென்று
எனக்கே தெரியாது.

இப்போதுதான் உணர்கிறேன்
காதல் தேசத்தின் மொழி
வார்தைகள் அல்ல
பார்வைகள் தான் என்று.



என் வார்த்தைகள்
உன்பார்வை பட்டதும்
பகலவனைக் கண்ட
பனித்துளிகள் ஆகின்றன.

உன்னை சந்திக்க வேண்டும்
என்பதற்காகவே–நான்
சந்திக்கு வருகிறேன்.
நடு "ரோட்டுக்கும்"
நான் வரத்தயார்
அதில் நீ
நடமாடுகிறாய் என்றால்.

உன் விழியின் பாஷையைத்தான்
என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை
கண்மணியே! நீ காட்டிய
கண்ஜாடையை கண்ட பிறகு தான்
கம்பனாக நான் பிறக்க வில்லையே என்று
கவலைப்படுகிறேன் .– உன்
பின்ஜாடைதானடி என்னை
பித்தனாய் ஆக்கியது.

காதலர் தினத்தில் உன்னை
கட்டாயம் காணவென்று
கூதலையும் பாராது
கொட்டும் மழையில் நனைந்தும்
தோது வரவில்லை
தோகை உன்னை சந்திக்க
தூது வருவதற்கும் என்னிடம்
தோழிமார்கள் இல்லை
ஏது செய்வேனடி
இனியவளே பதில் சொல்லடி
சொல்லடி என்பதற்காக
தந்து விடாதே
சொல் அடி

இப்போதெல்லாம்
நானாக நான் இல்லடி
நம் காதல் சின்னத்துக்கு
போடு ஒரு புள்ளடி
அதற்கான அடையாளமாய்
"ஐ லவ் யூ"
சொல்லடி–நம்
காதல் பஸ் பயணிக்க
கண்ணே ஒரு "வெல்" அடி

நம் காதலைப்பாட நான்
கண்ணதாசன் இல்லடி
உன் விழிதான் உலகில்
என்னை வீழ்த்துகிற வில்லடி
உன் வார்த்தைதான் என்னை
வாழவைக்கும் சொல்லடி
“ஐ லவ் யூ” சொல்லடி

# நீ செய்த மாயம்



கவிதை எழுத
கருதேடி அலைந்த எனக்கு-உன்
உருவைக் காட்டினாய்
உணர்ந்து கொண்டேன்.
கவிதை என்ன
காவியமே பாடலாம் என்று.

ஓவியமே! நீ
புதுப்புது அர்த்தங்களை
புரியவைத்துக் கொண்டு இருக்கிறாய்

உள்ளதை உள்ளபடி
உன்னால் மட்டுமல்ல
என்னாலும் இயலாது

நீயும் நானும்
நிலவும் வானும்
இருவருக்கும் இடையில்
எதுவித தொடர்பும் இல்லை
ஏதோ ஒரு உறவு
என்னவென்று புரியவில்லை

சிந்தனைக்குள்ளே-நீ
வந்தநாள் முதலாக
எந்தனை இழந்தேன்
வந்தனை மறந்தேன்
உந்தனை நினைத்து
ஓடாய்ப் போனேன்.

காதல் கயிற்றால் கட்டினாயா?
கண்ணெனும் வாள்கொண்டு வெட்டினாயா?

ஆடவும் முடியவில்லை
உன் நினைவுகளை விட்டு
ஓடவும் முடியவில்லை

நீ சிரித்தாய் என்றுதான்
சிலருக்குத் தெரியும்.
இதயத்தை
எரித்தாய் என்று
எவருக்கு புரியும்.

# விண்ணப்பம்

என் பெயரை
உன் பெயரோடு
இணைத்து எழுதத்தான்
விருப்பம் இல்லை என்றாலும்
உன்
இளைய பிள்ளையின் பெயரின்
இறுதியிலாவது
எனது பெயரின்–ஒரு
எழுத்தையேனும்
இணைத்துக் கொள்ளமாட்டாயா?

# பாவாடைக் காரி



உன் அழகை மட்டும்
இரசித்துக் கொண்டிருந்த போது —உன்
ஆடை தீண்டியது–அதுவும்
பாவாடை தீண்டியது

நீ
பாவாடைக்காரி மட்டும் அல்ல
பூவாடைக்காரி என்றும்
புரிந்து கொண்டேன்.

உன்
பாவாடை வருடிய வருடலினால்
என்
நாபாடத் தொடங்கி விட்டது

நீ
வீதி ஓரத்தில் எதையோ
விட்டு வந்தவள் போல
விழிகளால் தேடுகிறாய்.

தேடுகிற பொருளை
திருடியவனைப் பார்ப்பது போல் என்னை
இடையிடையே பார்க்கிறாய்

கண்களை மூடினேன்.
உன் பார்வையின் மருட்சியில்
என் கற்பனை விருட்சம்
துளிர்த்தது
தளைத்தது
கிளையோடியது
அரும்பியது
பூத்தது
காய்த்தது
கனிந்தது
சுவைத்தேன்.

இனிய நினைவுகளோடு
இமைகளை திறந்தேன்
இடையில் எங்கேயோ
இறங்கியிருந்தாய்
வாகனத்துக்குள்
இருந்து மட்டும்.

# காதல் கணிப்பீடு

தேன்மொழியே!
ஏன் இப்படி
என்னுள்ளே
எனக்கே தெரியாத
எத்தனை மாற்றங்கள்.

என் உணர்வுகளை எல்லாம்
கவிதையாக எழுதுவதென்றால் கூட
அதுவும் முடியவில்லை.

புதுக்கவிதையால் கூட
புனைய முடியாத
இது எது?



ஆயிரம் பேர் பேசினால் கூட
அத்தனை சத்தங்களையும்-நீ பேசும்
ஒரு வார்த்தை
உதைத்து தள்ளிவிட்டு
செவிவழியாகச் சென்று-மனதில்
சேமிக்கப்படுகிறதே அது ஏன்?

கேட்கவில்லை என்று சொல்லு
புரியவில்லை என்று சொல்லு
விளங்கவில்லை என்று சொல்லு
நான்
பேசவில்லை என்று மட்டும் சொல்லாதே
ஒவ்வொரு நொடியும்
உன்னோடு உரையாடிக் கொண்டுதான்
இருக்கிறேன்.

குளிர் நிலவு என்றுதான்
கேள்விப்பட்டிருக்கிறேன்.
அது சுடும் என்று -இப்போது
அடித்துச் சொல்கிறேன்.
அறிவுக்கற்றல் குளிரும்.
அனுபவக்கற்றல் சுடும்.

தீ இனிது என்றானே
பாரதி பைத்தியம் என்றால்
நானும் பைத்தியம்தான்.

நுளம்புகள்கூட
என் காதோரங்களில்
உன் பெயரை
முணுமுணுத்துவிட்டுப் போவதனால்
வலையிருந்தும் போடாமல்
துயில்கிறேன் தெரியுமா?

என்

ஆளுமையை

முழுமையாக

அபகரித்துவிட்டு

கணிப்பீடு செய்யவேண்டும் என்று

கரணம் அடிக்கிறாயே

நியாயமா?

ஒன்றை மட்டும் உணர்ந்துகொள்

காதல் கணிப்பீட்டில் -நான்

தேர்ச்சிமட்டம் அடையவில்லை என்றால்

அதற்குக் காரணம் நீதான்.

ஏனென்றால்

காதல் - காதலித்தல் செயற்பாட்டை

திட்டமிட்டவளே நீதான்.

# காதல் உதயம்

நான் பாடவில்லை என்று
நீ ஊடல் கொண்டு
எழுந்து சென்றபின்
தேடல் செய்தபோது
தெரிந்து கொண்டதுதானே
உன் பெயர்கூட

அன்றில் இருந்து இன்றுவரை
நீ பார்த்த பார்வைகள்
பேசிய வார்த்தகள்
காட்டிய ஜாடைகள் எல்லாம்
காதலின்
கதவு திறப்புகளாகவே
காட்சியளித்தது எனக்கு.

# முல்லைப் பூவின்
# உள்ளிக்கிடக்கை

சசி

வாழ்ந்தால் உன்னோடு
மட்டும் தான் வாழ்வேன்–இல்லையேல்
வாழைமரத்தில் என்றாலும்
தூக்குப் போட்டு சாவேன்

முல்லைக்கடலோரம்–நீங்கள்
சொன்ன சொல் எல்லாம் வெறும்
சல்லாப வார்த்தைதானா? சசி

கட்டுமரத்தடியில் நாம்
கதைத்திருந்த பொழுதுகளை
எட்டு நாட்களுக்குள்
எப்படி மறந்தீர்கள்?

"மிக்சர்" வாங்கித் தந்தீர்
மிச்சம் நல்ல அழகி என்றீர்
"சிக்சர்" அடிப்பபேன் என்றீர் ஆனால்
"வவுன்றி" கூடப்போடாமல்
வவுனியா சென்று விட்டீர்.

கிராமத்து குயில் இவளின்
கீதம் உற்ற காதலனை
"கொலிச்" இற்கு வந்த எந்த
கோதாரி மயக்கினாளோ!!

முல்லை நில மல்லிகை என்
மனம் கவர்ந்த மன்னவனை
பல்லை இழித்து எந்தப்
படுபாவி மயக்கினாளோ!

# நான் அவள் இவள்

கூடித்திரிந்த
காலம் எண்ணி
ஜோடியாக நீ
ஜொலி பண்ணுவதைப்பார்த்து
தாடி வளர்த்து தடவித்திரிவேன்
என்றுமட்டும் எண்ணிவிடாதே!

மாடி வீடு
மாப்பிள்ளையோடும்
மடியில் உந்தன்
மழலைகளோடும்
மகிழ்ந்து நீ
இருக்கும் போது
மங்கை உன்னை
தேடி வருவேன்.
தேவதை என்றல்ல
எனக்கென்று பிறந்தவளோடும்
எந்தன் பிள்ளைகளோடும்

"கொடுத்து வைத்தவள்" என்று நீ
கூறும் போது என் மனைவியை
தடுத்துச் சொல்வேன்
"நான்தான் கொடுத்து வைத்தவன்."

சிரிக்கின்றாள் என் மனைவி
சீதேவி என்னை பார்த்து
நானும் சிரிக்கின்றேன்
நாயகி அவளைப் பார்த்து.

எடுத்தெறிந்து பேசிய உனக்கு
இதயம் என்ற ஒன்றிருந்தால்
இப்போதாவது உணர்ந்திருப்பாய்
ஏதாவது ஒன்றை.

# மிச்சம் நல்ல பரிசு



உன் பெயரை எழுதி எழுதியே
என் பேனா இன்று காலமானது.
உன் தொலைபேசி இலக்கங்களைக் கேட்டுப்பார்
என்னைத் தொந்தரவுக் காரன்
என்று சொல்லும்.

வானொலியிலும்
வானலைகளிலும்
உன்னொலியே எனக்கு
எதிரொலிக்கிறது.

சூரியனைச் சந்திரனாக்கினாய்
இறைவனை இந்திரனாக்கினாய்
இது மந்திரமா?
இல்லை தந்திரமா?

எந்தவொரு
எந்திரத்துக்குள்ளும்
அகப்படாத இவனை — உன்
சுந்தரத்துக்குள் அடக்கிவிட்டாய்.

விந்தைக்காரிதான் மறுக்கவில்லை
விஷனம் செய்தாய் பொறுக்கவில்லை.

சுடுசோற்று ஒத்தடம்போல்
சுகமாக இருந்தவளே
படுபாவி இன்று என்னை
படுகுழியில் தள்ளியதேன்.

அடி போடி பைத்தியமே
உனக்கு இல்லை வைத்தியமே
எனக்கும் அப்படித்தான்.

கொடுசூரி என்று
சொல்லாமல் சொல்லுகிறாய்
கோதையே தடம்மாறி
கொல்லாமல் கொல்லுகிறாய்

"இன்ரநெற்"இல்" தூதுவிட
என்னிடம் கணினி இல்லை
கொண்ட காதல் நலமடைய
கோதை நீ குணனி இல்லை.

மணவறையில் நான் உனக்கு
தாலிகட்டக் கனவு கண்டேன்.
மனவறையில் நீ வராமல்
வேலிகட்ட நனவு தந்தாய்.

மச்சாண்டி நான் உனக்கு
பூச்சாண்டி ஏன் உனக்கு
மிச்சம் நல்ல பரிசு தந்தாய்
அச்சாப்பிள்ளை கெட்டிக்காரி

உன் உறவுக்குப் பாலம் கேட்டேன்
நீ ஊருக்கு ஓலம் போட்டாய்
வரவுக்கு விழி சாய்த்தேன்
செலவுக்கு வழிசெய்தாய்.

பேனாவைப் பிடித்து
பிதற்றுவது கவிதை என்றால்
நான் எழுதிய இந்த
நையாண்டியும் கவிதையேதான்.

# உன்னைத்தானே ...........

இந்தப்
பனைமரத்து நிழலைப்
பார்த்துச் சிரிக்கிறாய்
நீ
பேராதனைப் பூங்காவில்
பிறந்த அந்தூரியம்
தெரியுமா ?

கண்ணுக்குள்ளேயே இருக்கிறது
என்னைக்
கவனிக்க வேண்டும் என்று
குடு குடென நீ நடந்த
குதூகலக்காட்சி.

தேனீர் அதிகம்
தித்தித்த காரணம்
சீனி அதிகம்
இட்டது அல்ல
அன்போடு கிண்ணத்தை
நீங்கள் தொட்டது.

கழுத்தில் வியர்வை
கண்ணிலே பாசமுமாய்
அழுத்தமாய் ஓர்
அன்புப் புன்னகை
பழுத்த முக்கனிச்
சுவையிலும் சுவையாய்.

காதல் பறவைகளை
ரசித்தபோதுகூட
ஏற்பட்டதில்லை
என்னைக்கண்டு
நீ பறந்த பறப்பால்
ஏற்பட்ட இன்பம்.

ஒன்று மட்டும் உண்மை
என் இறுதி மூச்சுவரை
இதயத்துள் இருப்பவர்களுள்
நீயும் ஒருத்தி
அன்னையையும் சேர்த்ததால்.

உன்னையே பார்த்தபடி
உயிர் வாழ்வதென்றால்
உறக்கமும் உணவும்
ஒருபோதும் தேவையில்லை.

விண்ணையும் மண்ணையும்
விற்றாலும் கூட–உன்
கண்ணழகின் விலையை
கடுகளவும் நெருங்காது.

தந்தையும் தாயும்
தவம் செய்திருக்கவேண்டும்
உந்தனைப் பிள்ளையாய்
உண்மையில் பெற்றெடுக்க....

சுந்தரி காளியை
சுத்தமாய் போற்றியதால்
அந்த அன்னை
அவளிலும் அழகாய்
அள்ளிக்கொடுத்திருக்கிறாள்

உந்தனை அடைய
ஒருவன் பிறந்திருந்தால்
அந்த ஆடவன்
ஆற்றிய தவத்திலும்
அதிகமாய்ச் செய்து
அடுத்த ஜென்மத்தில்
ஆவது உன்னை
அடையவேண்டும்.
அல்லது.......

காமம் தலைக்கேறிய
காரணம் அல்ல–உன்
நாமமும் எனக்கு
நமசிவாயம்தான்.

இத்தனை வரிகளையும்
என்னை எழுதவைத்த–உந்தன்
சித்து விளையாட்டு
என்ன தெரியுமா?
ஒற்றைப் பின்னலை
ஒருமுறை எடுத்து
நெற்றியைச் சுற்றி
நின்கரத்தால் பிடித்தபடி
நேசமாய்ச் சிலநொடி..
நீ சிரித்ததுதான்.

பின்னல் என்ற
பெயரின் காரணத்தை
உன்னால்தான்
உணர்ந்துகொண்டேன்.

ஒரு பின்னல் அழகையே
ஓதமுடியாமல் தவிக்கிறேன்
இரு பின்னல் அழகையும்
இயல்பாகக் காட்டினாய்
எப்படி இருக்கும்?........
உணர்வாயோ என்னவோ......
உணர்வாய் என்று
உணருகிறேன்.



பூர்வஜென்ம பந்தமோ..
புரியவில்லை கண்ணே
கோர்வையாக உன்நினைவு
கூடவே வருகிறது.
ஆர்வக்கோளாறும் அல்ல
அதையும் தாண்டி
வேர் பதித்த விருட்சமாய்
விலகாமல் உன்நினைவு

பார்வையின்போது
மட்டுமெனில்
பரவாயில்லை கண்ணே
போர்வையினுள் விழிமூடும்
போதும் அதேநிலைதான்.

எதை உண்ணும் போதும்
எனக்கும் கொடுக்க
எண்ணுகிறாயே
எனக்கு அந்த
எண்ணமே போதும்.

மிக்சர் கொடுத்தபோது
மிக்க மகிழ்ச்சி
காரணம்
வைரமுத்துவின்
வரிகள் ஞாபகத்தில்.

"பஞ்சி மிட்டாய்
அஞ்சி ரூபா–நீ
பாதி தின்று தந்ததால்
லெட்சரூபா"
"குண்டு மல்லி
இரண்டு ரூபா–உன்
கூந்தல் ஏறி உதிரும் பூவோ
கோடி ரூபா...."

அந்த வகையில்
நானும் கோடீஸ்வரன்
உன்
கூந்தலில் இருந்த
குங்கும ரோஜாவை
ஏந்தும் பாக்கியம்
எனக்குக் கிடைத்தது

எடுத்த ரோஜாவை
எவரும் அறியாமல்
முத்தமிட்டு முகர்ந்தபோது
மோட்சத்தை உணர்ந்தேன்.

அட்டமா சித்திகள்
அடியேன் அடைந்திருந்தால்
அடுத்த வெள்ளி
ஆலயம் செல்கையில்
அடியேன்தான் கூந்தலில்
குடியிருந்திருப்பேன்.

நீயும் உண்டபின்
நீட்டியவைதான்
தூய அன்பைக்
காட்டியதெனக்கு

பலகாரத்திலும்
பாதியை உண்டு
பாக்கியசாலியாய்
ஆக்கியிருக்கலாமே....

எதையோ எழுதவந்து
எதையோ எழுதுகிறேன்.

என்னைப் பொறுத்தவரை
எந்தப் பெண்ணும்
உன்
முன்னழகுக்கு முன்னால்
முக்காடு போடவேண்டும்
பின்னழகுக்கு முன்னால்
பிச்சை வாங்கவேண்டும்
கண்ணழகுக்கு முன்னால்
காலில் விழவேண்டும்
பேச்சழகின் முன்னால்
மூச்சை விடவேண்டும்
நடையழகின் முன்னால்
நாணம் கொள்ளவேண்டும்
சடையழகின் முன்னால்

சாகத்தான் வேண்டும்
இத்தனைக்கும் மேலாய்
உள்ளத்தின் அழகின் முன்னால்
ஓடத்தான் வேண்டும்..
என்னைப் பொறுத்தவரை
இதுதான் சத்தியம்.

ஒருவிதம் பிடிக்கும்
என்பதை அறிய
ஓடித்திரிந்தாயே
இப்போது சொல்கிறேன்
நூறு விதமும்
உன்னைத்தான் பிடிக்கும்.

ஒழுக்கம் உடைய
உன்னை அடைய–சில
அழுக்கடை ஈக்கள்
ஆசைப்படுகின்றன
இழுக்கு வந்ததாய்
எண்ணி அழுகிறாய்...
புழுக்களின் செய்கைக்கு
பொற்குடம் அழலாமா...?

இப்படிக்கு
உனக்குத் தெரியும்
நான் யாரென்று
உலகம் அறியுமா
நீ யாரென்று?

# பூவை



நீ
ரோஜாப்பூவை
சூடினாலும் அழகு
ஆனால் ரோஜாப்பூ
நீ சூடினால்த்தான் அழகு.

பெண்கள்
பூச்சூடினால் அழகு-ஆனால்
பூக்கள்
நீ சூடினால்த்தான் அழகு.

பூலோக சுவர்க்கம்
உன் கூந்தல் பூக்களுக்கு
மட்டும்தான்.

# பெண்ணியமும் நானும்

## சூரியனாக மாறி விடு



பெண் பூவே!
உனக்கு நடத்தை கெட்டவள்
என்னும் பட்டத்தை
எடுத்துக் கொடுக்க வேண்டும்
என்பதற்காகவே–சில
துட்டத்தன
கெட்ட இன வண்டுகள்
சுற்றி வட்டமிட்டுச்
சுழன்று வருகின்றன. அவை
கிட்ட வந்து
முட்ட வரும் போது
எட்டியோடாதே
சுட்டெரிக்கும் சூரியனாக மாறிவிடு
உனக்கு முன்–அவை
வெறும் பஞ்சுகளே.

# பெண்ணே.......

பெண்ணே
பேதை என்ற
பெயரை மாற்று - புதிய
பாதை கண்டு
வாழ்க்கை படகை ஓட்டு

கற்பு என்ற இலக்கணம்
மங்கையர்க்கு மட்டுமா
பெண்மை இன்றி
இந்த மண்ணில்
பெருமை வந்து கிட்டுமா
விடுதலை ஓடி வந்துன்
வீட்டு வாசல் தட்டுமா
உரிமைகள் தேடி வந்து
காலடியில் முட்டுமா

அடிமை விலங்கு என்பதை
யார் உனக்கு இட்டது
சுடுமொழிகள் பேசி உந்தன்
சுதந்திரத்தை சுட்டது
இராமன் பின்னே சீதை என்ற
இராமாயணம் வேண்டுமா?
இராமனோடு சீதை என்ற
இராமாயணம் வேண்டுமா?

# கல்யாணம்



வளிமண்டலதின் வெப்பம்
விஞ்ஞான விளக்கம்
ஓசோன் படலத்தில்
ஓட்டை விழுந்தது.
மட்டும் என்று
மனிதா எண்ணாதே

கலியாணம் ஆகாத
கடைநிலைக் கன்னிகளின்
ஏக்கப் பெருமூச்சை
எண்ணிப் பார்த்ததுண்டா நீ

இந்தச் சீதைகளின் ஜனகர்கள்
எந்த வில்லையும்
வைத்திருக்க வில்லை
இராமர்களின் கோசலைகள்
எங்கு பெற்றார் இந்த வில்லை

வந்தான் ஒருவன்
வாட்டசாட்டமான அழகன்
தந்தான் ஒரு ரோசா
வருடினான் கையை லேசா
வெட்கத்தில் ஓடி
வளைக்கையால் முகம் மூடி
அம்மா அப்பாவின்
ஆணை வேண்டும் என்றாள்.

சிங்கம் போல் எழுந்தான்
சென்றான் பெற்றோரிடம்
அவர்களும் சம்மதிக்க
அடுத்த நாளே கல்யாணம்
தாலி ஏறியது
தாங்கவொண்ணா மகிழ்ச்சி
தடவினாள் கழுத்தை
தாலியை காண வில்லை
தொலைந்து போனது
கனவில் கட்டிய தாலி மட்டுமல்ல
அன்றைய இரவின்
அரைவாசித் தூக்கமும் தான்.

# மனிதமும் நானும்

## குயிலின் குரல்

வேரிருந்தும் நீ வரண்டு
வாடுவதேன் பூங்கொடியே?
வேரிருந்தும் நீரருந்த
முடியவில்லை பூங்குயிலே

காரணம் ஏன் கார் பொழியத்
தவறியதோ பூங்கொடியே?
கார் பொழிந்தும் ஒரு மனிதன்
வேரதனை வேணுமென்று
அறுத்துவிட்டான் பூங்குயிலே

ஆ..... ஐயோ! அப்படியா?
உன் நிலைமை இப்படியா?
பதறாதே பூங்கொடியே
கதறாதே பூங்கொடியே

காரணத்தைக் கூறுகிறேன்
காது கொடு பூங்கொடியே
பாரில் ஒன்றும் இது புதுமையில்லை
பகரரிய பூங்கொடியே

பாரி வள்ளல்போல இந்த
பாருலகில் யாருமில்லை

மாறும் என்றா நினைக்கின்றாய்
மண்ணுலகின் இந்நிலைமை
தேறாது மனித இனம்
தேறாது ஒரு போதும்.

# போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்



புதியதோர் உலகம் செய்வோம்--கெட்ட
போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்
என்று சொன்னான் அன்று ஒருவன்
உண்மைதான் அதைநான் மறுக்கவில்லை
உலகை நினைக்க மனது பொறுக்கவில்லை.

எங்கு பார்த்தாலும் யுத்த ஓலம்
இதுவே இன்றைய உலகின் கோலம்
எத்தனை எத்தனை யுத்தங்கள்
எங்கும் அழுகைச் சத்தங்கள்
மனதுக்கு நிம்மதி பெற்றிடவே
மனிதன் வகுத்தான் மதங்களை--அதை
மறந்து போனானோ தெரியவில்லை
மாறாகப் புரிகின்றான் மதச்சண்டை

உலகைப் படைத்த உத்தமனே--அதற்கு
உரிமை கொண்டாட வில்லையடா
எல்லைகள் போட்டது யாரடா? இதை
எண்ணி நீயும் பாரடா?

உறவு கொண்டாட வேண்டுமென்றே
உண்மையில் மனிதன் மொழியயின்றான்
பிறகு என்ன நேர்ந்ததுவோ வெறும்
பேயர்களாய் மொழி பேதம் செய்தான்.

கருவிலும் உருவிலும் வரவிலும் கூட
கணிசமேயேனும் பிரிவினை இல்லை
இருப்பினும் கறுப்பினம் வெள்ளையர் என்று
பிரிப்புகள் எத்தனை செய்தாய் இன்று

இனமத மொழி பேதங்கள் ஏனடா
இன்றைய உலகம் உன்கையில்தானடா
இனமத மொழி பேதங்கள் இயற்றியதே
இன்பமாய் மனிதன் வாழ்ந்திடத் தானடா

அகதிகளின் அழுகை ஓலங்கள்
அநாதைகளின் ஏக்கப் பெருமூச்சுக்கள்
விதவைகளின் வெந்து போன இதயங்கள்
அங்கவீனமான மனித ஜீவன்கள்
சொந்த மண்ணின் காற்றை
சுவாசிக்கமுடியாத நிலைமைகள்தான்
இந்த யுத்தம் எமக்களித்த சொத்துகள்
இத்தனையும் எமக்கு எதற்கு மானிடா
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாயடா

துப்பாக்கிகளின் தூறல்கள் எமைத்தாக்கும்
நிர்ப்பாக்கிய நிலைமை மாற வேண்டும்
யுத்த ஊற்றுக்களின் ரெத்த வெள்ளம் காய்ந்த
சுத்தமான ஒரு நாடு வேண்டும்

பொருளாதார வீழ்ச்சியினால்-மக்கள்
படும்பாடோ மிகப் பெரும்பாடு
அரசியல் கெடுபிடி அதனாலே-மக்கள்
அடைவது எத்தனை இடர்பாடு
சொந்த வீடு வாசல் எல்லாம்-இன்று
சோவென்ற பெரும் சுடுகாடு
இந்த நிலையை மாற்றிடவே-கெட்ட
போரிடும் உலகை வேரோடு சாய்ப்போம்

ஓசோன் படலத்தில் ஓட்டை-அது
உன்னால் உனக்கே கிடைத்த சாட்டை
அணுவாயுதங்கள் செய்து வைத்தாய்
அதனிடம் நீயே கைதியானாய்
மழை பொழிய மறுக்குது பாரடா
மண்ணிலே மதிகெட்டுப் போனாயே மானிடா
இனியும் வேண்டாம் எமக்கிந்த யுத்தம்
போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்.

# கிளியே பேசு



பேசு கிளியே பேசு–உன்
பேர் விளங்கப் பேசு
துட்சணராய் வாழும்
துன்மார்க்கர் தம்மெதிரே
அச்சம் இன்றி வந்து
அஞ்சுகமே பேசு

மிச்சம் நல்ல உயர் இனமாய்–புவி
மீது வாழும் மானிடர் முன்
கொச்சைத் தனமான செய்கைகளை
குத்திக் காட்டிப் பேசு

அயல் வீட்டில் மூன்று நேரம்
அடுப் பெரிந்தால் தங்கள்
வயிறெரியும் மாந்தர் முன்னே
வந்து நீயும் பேசு

பாடுபட்டு முன்னேறும்
பண்பாளரைப் பார்த்து
புறணி பேசும் புல்லர்களுக்கு
புத்தி சொல்லிப் பேசு

ஏமாற்றிப் பிழைப்போர்
எவரோ அவரோடு
தாமாற்றும் செய்கையின்
தரம் குறித்துப் பேசு

ஏழைகளைச் சுரண்டி
எல்லோரும் போற்றவாழும்
மூளையில்லா செல்வந்தர்கள்
முன் வந்து பேசு

தாய்மை அடையும்
தன்மை கொண்டவளாயினும்
ஆண்மையின் குறையதனால்
அப்பேறு இன்றிவாழும்
தூயவளை மலடி என்று
தூசணம் பேசிவாழும்
பேயர்கள் முன்னே வந்து
பேசுகிளியே பேசு

நாசத்தனங்களை
நன்மை தீமை உணராமல்
ஆசையாய் செய்து வாழும்
அனியாயக் காரரோடும்
நேசம் ஆனவர் போல்
நெருங்கிப் பழகிவஞ்சனை செய்யும்
மோசக் காரரோடும் உன்னினிய
மொழியதனால் பேசு


அம்மாவை மறந்துவிட்டு
ஆசை நாயகிகளோடு
கும்மாளம் அடிப்போரோடு
சும்மாவாகிலும் பேசு

சமுதாய முன்னேற்றம்
சடுதியாய் வேண்டுமென
தமது வேலைவிட்டு
தரணிக்காய் சேவை செய்யும்
நமது நல்ல பெரியோருக்கு
அவதூறு கூறுவோரை
உமது இனிய குரலாலே
உண்மை விளங்கப் பேசு

நாட்டுப் பற்றாளர்களாய்
ஊருக்கு உகந்தவராய்
காட்டித் திரிந்துகொண்டு
கயமை செய்து வாழும்
கூட்டிக் கொடுப்போரோடு
குவலயத்தில் நீயும்
கட்டாயமாய்க் கிளியே
காரசாரமாய்ப் பேசு.

எத்தனையோ பேர் இன்னும்
இருக்கிறார்கள் நீ பேச
அத்தனை பேரையும் உனக்கு
அறிமுகம் செய்துவைக்க எனக்கு
முடியவில்லை கிளியே
முடிந்தால் நீ சந்தித்து
பேச்சுவார்த்தை பண்ணினால்
பெருமை கொள்வேன் நான்
பேசு கிளியே பேசு

# குறட்டை இராசா



வாச்சுப் போச்சு
வடிவான சேற்றுக்குளம்
ஆட்சி செய்கிறார்
அருமந்த குறட்டை ராசா.

விரால்களுக்குத்தான்
விலையில்லை இக்குளத்தில்.
அரச ஆதரவும்
அந்தக் குறட்டைக்கே

மந்திரி பதவிக்கு
மகாபோட்டி நிலவுவதால்
விலாங்கின் ஆதரவும்
விருப்பும் இவருக்கே

திருட்டு முழி
திரும்பினால் கருங்கஜம்
வரட்டுக் கௌரவம்
வாய் முழுதும் வஞ்சனைச்சொல்
புரட்டு வாழ்க்கை
புரியாத குடிசனங்கள்
அரட்டை அடித்தே
ஆளுகிறார் குரட்டை ராசா

வெருட்டிப் பழகிவிட்டார்
வேறிடத்தில் வாய்க்காது.
சுருட்டுவதே நோக்கம்
சொல்லளவில் தேசபக்தி

அழுக்குள்ள குளம் என்று
ஐயாவுக்குத் தெரியும்.
ஒழுக்கம் பேசியே
ஒடுங்க வைக்கிறார் குளத்தை

ஊத்தை குடிப்பதற்கே
உலாவருவார் குளத்தை
கேட்டால்
காத்தல் கடவுளென்று
காட்டிக் கொள்ளுகிறார்.

குஞ்சுமீன்கள் பாவம்
குரட்டை ராசாவுக்கு அஞ்சி
பிஞ்சுமனம் நோகப்
பிழியப் படுகின்றன.

நெஞ்சு பொறுக்குதில்லையே
நிலை கெட்ட மாந்தரை
நினைக்கின்ற போது

ஒருகுறட்டை இத்தனை
உயர்ஜாதிக் குஞ்சுகளை
விழுங்குவது தெரிந்தும்
விட்டுவைத்ததெவர் தப்பு

குஞ்சுமீன் துஷ்பிரயோகம்
குளத்தில் ஏராளம்
அஞ்சுகின்றன மீன்கள்
அவற்றை வெளிப்படுத்த

அஞ்சுவர் என்பதையே
ஆதாரமாய் கொண்டு
ஆட்டம் போடுகிறார்
அடங்கும்நாள் தூரமில்லை

# இயற்கையும் நானும்

## வனமில்லாத பூமியிலே



நஞ்சை புஞ்சைகள் விளையவில்லை
இது காலதேவதையின் பிழையுமில்லை
மழையை அழைத்தளிக்கும் வனங்களில்லை
அதனால் வந்ததே இந்தத் தொல்லை.

அன்றாடம் அழிக்கப்படுகிறது வனம்
அதனால் அல்லலுறுகிறது மனித இனம்
இதை தடுப்பதற்கு மாறவேண்டும் மனிதனது மனம்
சிந்தித்துப் பாரடா மனிதா ஒரு கணம்
கொண்டாட மட்டுமா உலக சூழல் தினம்.

சந்தனம் தந்தது இந்த மரம்
சமைக்க
இந்தனம் தந்ததும் இந்த மரம்
தவிக்கும்
வெந்துயர் தந்திடும் வெயிலினிலும்
அன்பாய்
வந்து நில் என்றதும்
அதன் நிழலே

எந்த வகையிலும் உந்தனுக்கு
தொந்தரவு தந்திடாத வனமிதனை
சட்ட விரோதமான முறையில்-தினம்
வெட்டி வீழ்த்தி விடுவதனால் ஏதும்
பட்டம் பதவிகள் கிடைத்திடுமோ-இதை
சற்று நீ யோசித்துப்பாரும் நண்பா

அடியோடு வேரோடு அழித்தாய் காட்டை
அதனோடு அமைத்தாய் கைத்தொழில் பேட்டை
அதனால் ஓசோன் படலத்தில் ஓட்டை
அதிகரிக்கச் செய்தது சூழலில் சூட்டை
தோன்றின நோய்கள் பல மூட்டை
அழியாதே மனிதா அருமந்த காட்டை
இனங்கள் மாத்திரம் இருந்தென்ன பயன்
வனங்கள் இல்லாத வரண்ட பூமியிலே

நீர் நிலைகள் மாசடையும் - அண்ட
வெளியில் வளியோ தூசடையும்
போசணை இன்றியே பயிர் விளையும் -நீர்ப்
பாசன வசதி பாழடையும்
அரசியல் பொருளாதாரம் தாழ்வடையும்
ஆயுர்வேத சுகாதாரம் வீழ்வடையும்
வளம் பெற்று விளங்காது எத்துறையும்
வனமில்லாத இப் பூமியிலே

மாரி பொழிய மறுக்குதம்மா- வெயில்
மண்டை தெறிக்க எறிக்குதம்மா
ஆறுகள் ஏரிகள் காயுதம்மா-அயல்
அடவிகள் அழிக்கப்படுவதனால்
சாறு பொழியும் கரும்பினங்கள்-தினம்
கருகிச் சாம்பல் ஆனதம்மா
சோறுதரும் பச்சைவயல் காணி-எல்லாம்
சொந்த உருமாறி வெளுத்ததம்மா
மாறிவருகுது இயற்கையெல்லாம்
வனமில்லாத பூமியிலே

தாவர மூலிகைகள் கொண்டு
தரணியில் எரிபொருள் தட்டுப்பாடற
பெற்றோலியப் பொருள் கண்டறிந்தால்
வனங்களால் பெற்ற பயனல்லவோ

நாட்டில் ஏற்பட்ட வன்செயலால்
நாளும் பொழுதும் பாதைகளில் - மக்கள்
பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு
பரிதவித்த அந்த வேளையிலே
புகலிடமாக அமைந்தது வனமே
புரிந்து நடந்திடு மனித இனமே

காபனீரொட்சைட்டாம் கரியமில வாயு
பாமர மக்களைப் பாதித்திடாமல்
தாமதை உறிஞ்சி ஒட்சிசன் அளித்திடும்
வள்ளல் இனங்கள் வனங்கள்
வாழ்வது எங்ஙனம் சனங்கள்
வனமில்லாத பூமியிலே

வாசமலர்தரும் ரோசாச் செடியினை
வாசலில் நட்டுப் பேணுவதால்
மோசம் விளையுமோ ரோசம் குறையுமோ
யோசனை பண்ணிப் பாருமையா
சுவாசம் வளம் பெறும் தேசம் புகழ்ந்திடும்
மாசடையும் சூழல் மாறிவிடும்
ஆரோக்கியம் அளித்திடும் பூமரங்கள்
அறிந்து நடக்கவேணும் பாமரர்கள்.

பாலைவனமான பூமியை —நல்ல
சோலைவனமாக மாற்ற
காலை மாலை பாராது–தினம்
சூழலைப் பாதுகாரு.

அரிசி விளையும் தரிசுநிலங்கள்
வெறிச்சோடிப் போயின பூமியிலே
பயிர்ச்சோலை ஆக்கிட வேண்டும் - உலகைப்
புதுப்பித்திடணும் மீண்டும்.

விறகு உனக்கு வேண்டுமெனில்
பட்ட மரத்தை மட்டும் வெட்டியெடு
பச்சை மரம் ஒன்றை வெட்டியபின்
இரு நன்மரக்கன்றுகள் நட்டுவிடு
தனங்கள் தானாக சேரமாட்டாது
வனங்கள் இல்லாத பூமியிலே

உணவு உடை உறையுள் என்னும்
உரிய அடிப்படைத் தேவைகட்கும்
அத்திவாரமாய் அமைவது வனங்களே
மனித இனமும் மற்ற ஜீவராசிகளும்
கணமேனும் வாழ்வது எப்படியோ
வனமில்லாத இப் பூமியிலே.

# சுனாமி



கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்து விட்டு
வஞ்சம் வைத்து வாரி சுருட்டி அள்ளி
நெஞ்சை நெகிழ வைத்த —எங்கள்
நீலக்கடல் பேரலையே

நீ வந்து போய் இன்று
நினைவாண்டு ஒன்று எனினும்
நீ கொடுத்த ரணங்களினால்
மீள முடியவில்லை சனங்களினால்

உப்புக்கடலென்று
செப்பியதாலா
அப்பிக் கொண்டு போனாய்—எங்கள்
ஆருயிர் உடமைகளை
தப்புச் செய்துவிட்டாய் என்று
தண்டிக்க தகுதியில்லை இனியாச்சும்
இப்படி ஒரு வேலையை
எமக்கு செய்யாதே—செய்தால்
தப்படி தாயே தப்பு

நீயும் ஒரு பெண் தானே
அணைத்துக் கொண்டு
அழுத தாயின் கைமகவை
இழுத்துக் கொண்டு போகும்படி
என்ன பிழை செய்தோம் அம்மா.

ஒப்புக் கொள்ளுகிறோம்
உண்மையிலேயே பிழைதான்
முலை விழுந்தால் வயிறுதானே தாங்கும்.
மூத்தோர் வாக்கல்லவா
அலையாக வந்தா எம்மை
அள்ளிக் கொண்டு போக வேண்டும்.

மணல்வீடு கட்டி விளையாடும் போது – சிறு
அலையாக வந்து அழித்தபோது சிரித்தோம்.
குருவிக் கூடுபோல வீடுகட்டி வாழ்ந்தபோது –ஆழிப்
பேரலையாக வந்தாயே அதனால்தான் மரித்தோம்.

கணவனையும் மனைவியையும்
காவுகொண்ட நீ
குழந்தைகளை மட்டும் ஏன்?
கூட்டிச் செல்ல மறந்தனையோ!

மனைவியையும் பிள்ளையையும்
மருவிக் கெண்டு போன போது
கணவன் மட்டும் உன்
கண்ணுக்குத் தெரியல்லையா?

ஆருயிர்க் குழந்தையையும்
அன்புக்கினிய கணவனையும்
பாரபட்சம் பாராமல்
பறித்தெடுத்த உனக்கு
மனையாளைக் கொண்டுபோக
மனம் வரவில்லை ஏனோ!

ஒன்றுமட்டும் சொல்லுகிறோம்
ஊடுருவி வந்து
உயிர்குடித்த பேரலையே —எங்கள்
உணர்வுகளை மட்டும் உன்னால்
ஒன்றும் செய்ய முடியாது.
அலையில் கலந்த உறவுகட்கு —எங்கள்
ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்.

நத்தாரை மறந்து
நாங்கள் வாழ்ந்தாலும்
நத்தாரின் மறுநாள்
செத்தார் அனைவருக்காயும்
சொரிகின்றோம் கண்ணீர்ப் பூக்கள்.

வாரிதியின் வருடலினால்
வாழ்விழந்த எங்கள்
ஆருயிர் அத்தனைக்கும்
ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகள்.

ஒன்றை மட்டும் உணருகிறோம்
பொங்கி வந்தது கடலல்ல — அது
ஆண்டவன் போட்ட மடல்.

போட்டி பொறாமை
பொய் களவு வஞ்சனைகள்
காட்டி வாழும் மனிதனுக்கு
கடவுள் இட்ட சாட்டையடி

ஆனாலும் ஒன்று தாயே — உன்
அச்சுறுத்தல் செயல்கண்டும் –மனிதன்
அடுத்த சுனாமிக்குத்தானே
ஆயத்தம் பண்ணுகிறான்.

# இறைவனும் நானும்

## இறை துதி



பிரணவ ரூபப் பரம் பொருளே
பிறைசூடி பெற்ற முதல் மகனே
வருநவக்கிரக  தோசங்களை
விலக்கி வினையறுக்கும் கழலே
பிரமனும் போற்றும்  பெருவடிவே
போற்றுகின்றோம் உன் திருவடியே
கரங்குவித்துத் தொழும் அடியாரிருளை
கலைந்திடப் பொழிந்திடு திருவருளை

சகலகலா வல்லியே சரஸ்வதியே
சரணம் புகுந்தேன் நீயே கதியே
பகலிரவாய் உனை பாடுதற்கு
பாரில் எனக்கு வரம் அருள்வாய்
புகலிடமாய் என் மனதிலும் நாவிலும்
புரியம்மா வந்து திருநடனம்
மகவழுதால் மாதா பொறுப்பாளோ
மனமுருக அழைத்தால் வாராதிருப்பாளோ
பகலவனாய் இருள்போக்க இது தருணம்
பார்வதியுன் பாத பங்கயமே சரணம்.

பற்றினேன் உன் பாதார விந்தம்
பரனே நீ என் சொந்தம்
வெற்றிவேலவனே விரைந்து வந்து
வேட்கை தணித்திடு கந்தா
சுற்றி சுழலும் உலகில் நீயே
சுகமளிக்கும் தெய்வமாக வந்தாயே
முற்றிமுதிர்ந்த நிலை முருகா நீ தருவாய்
மூவுலகும் ஆளும் குருவே நீ வருவாய்.



# எரி சூலம்

தேவி உன்னை
தெரிசனம் செய்ய
தேடிவந்தேன் கோயில்
ஆனால்
பாவி மனிதர்களால்
பரிகசிக்கும் இடமாக
பார்த்தேன் உன்தன் உறைவிடத்தை.

விதியறியாக் கிரியைகள்
விசர்த்தனமான செய்கைகள்
கதிகலங்க வைத்தது என்னை–இருந்தும்
கைதொழுதேனடி உன்னை.

போட்டியும் பொறாமையும்
பொய்யும் வஞ்சனையும்
சூது வாதுகளும்
சுயநலத் தன்மைகளும்
பாதகத் தனங்களும்
பண்பில்லாத் தன்மைகளும்
நீலி உன் சந்நிதியில்.

மகிடாசுர மர்த்தினியே! —உன்
மண்டியின் இந்நிலை மாற
எறிசூலம் எறிவதற்க
ஏன் இன்னும் தாமதமோ?

இத்தனை துட்டர்களின்
இறுமாப்பு அழிப்பதற்கு
ஒருசூலம் தானே தாயே
உள்ளது உன் திருக்கரத்தில்
எத்தனை பேருக்கென்று
எறிவாய் திரிசூலம்.

மனித இனம் என்பதே
மறைந்து போகும் என்பதாலா?
அநியாயம் கண்டும் – உந்தன்
ஆயுதத்தை பிடித்தே உள்ளாய்.

ஆன்மா மல நீக்கம்
அடையும் இடமே ஆலயமாம்
ஆனால் இன்று அந்த
அர்த்தமே தலை கீழ்தான்.

நீ இருக்கும் இடமென்று
நிச்சயமாய் தெரிந்திருந்தும்
நான் என்ற அகங்காரத்தோடு
தருமத்தை மறந்து தழைக்குதுகேடு

அம்மா நீ பொறுத்தது போதும்
அநியாயம் தழைத்தது போதும்
இனியாச்சும் எறியம்மா சூலம்
இன்பமாய் வாழட்டும் ஞாலம்.

உன்னாலே ஆகாதது
உலகத்தில் ஒன்றுமில்லை
தன்னாலே திருந்தும்
தரணி என்றா நினைக்கின்றாய்
முன்னாலே போக விட்டு
முதுகில் குத்தும் இனமம்மா
பின்னாலே என்னென்று
பிழைப்பாரோ நீ கூறு.

இன்னுமென்ன தாமதம் சிங்கத்தில் ஏறு
இறுமாப்புக்காரரை சினம் கொண்டு சீறு
பித்தலாட்டக்காரரை போடு இரு கூறு
பிரியமான தொண்டருக்கு கூறு ஆசி நூறு.

# நூலாசிரியரைப் பற்றி......



திரு.ந.யோகேந்திரன் ஓர் சிறந்த ஆசிரியராவார். இதனைவிட ஒரு பிறவிக் கவிஞர் என்றால் மிகையாகாது. இவர் கலைக்குடும்பத்தில் பிறந்தவராக மட்டுமல்லாது கலைக்குப் பெயர் போன கிராமமான தேத்தாத்தீவு மண்ணின் மைந்தனாவார்.

இவர் தனது பாடசாலைக் காலம் முதல் கவிதை எழுதுவதில் நாட்டம் உடையவர். கவிதை பற்றிய அறிவோ, ரசிக்கும் உணர்வோ இல்லாத காலத்தில் இவரது கவிதைகள் என்னை ஆட்கொண்டு விட்டன. அதுமட்டுமல்லாது இவரது கவிதைகள் பல எனது அடிமனதில் ஆழமாகப் பதிந்து விட்டன. அவை அவ்வப்போது என் வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் என்னை ஆற்றுப்படுத்தியும் செல்கின்றன.

இவர் நாடகம், இசை என்பனவற்றில் மிகவும் ஈடுபாடு உடையவர். பல நாடகங்களை எழுதியும், நடித்தும் மாகாண மட்டம் வரை வெற்றி பெற்றதோடு சக்தி டீவியின் "இசை இளவரசர்கள்" நிகழ்ச்சி மூலம் பாடலாசிரியராகவும் தடம் பதித்துள்ளார். தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற சிறுவர் இலக்கியப் போட்டியில் சிறுவர் பாடல் நிகழ்வில் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றுள்ளார். அத்தோடு தேத்தாத்தீவு வடபத்திர காளி அம்மன் காவியம் வெளியீடு கண்டதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இவருடைய கவிதைகள் அனைத்தும் தற்காலத்தில் மட்டுமன்றி எக்காலத்திலும் படித்து இன்புறத்தக்கவையாகவும் சமூக சீர்திருத்த, சமூக முன்னேற்ற நோக்குடையதாகவும், முற்போக்குக் கருத்துக்களை கொண்டமைந்தவையாகவும் எதிர்காலக் கவிஞர்களுக்கு வழிகாட்டுபவையாகவும் அமைந்துள்ளன. இவருடைய இந்தக் கன்னி முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகவும், பாராட்டுக்குரியதாகவும் அமைந்து காணப்படுகின்றது. இவருடைய தமிழ்ப்பணி தொடர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

திரு.வே. பகிரதன்,
விரிவுரையாளர்,
மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி,
மட்டக்களப்பு.